உ

கடவுள் துணை.

# கீர்த்திரச மஞ்சரி.

இஃது

ஆண்டிபட்டி ஜமீன்தாரும், மதுரைத் தமிழ்ச்சங்கம்

உப அக்ராசனாதிபதியுமாகிய கானாடுகாத்தான் ஸ்ரீமான்

சா. ராம. மு. சித.

**பெத்தாச்சிசெட்டியாரவர்கள்மீது**

சிவகங்கை

ஜவுளி வர்த்தகம்,

வெள்ளைச்சாமி சேர்வை

அவர்கள் குமாரர்

**பெரியசாமி சேர்வை**

அவர்களால்

இயற்றப்பெற்று

சிவகங்கை,

மகா-௱-௱-ஸ்ரீ

**யெம். யெஸ். யெஸ். மணி**

அவர்களது

ஸ்ரீ கலா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப் பெற்றது.

1917.

உ

கடவுள் துணை.

# சாற்றுக்கவிகள்.

திருச்சினுப்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜ்
தமிழ்த்தலைமைப்பண்டிதர்
மகா-ா-ா-ஸ்ரீ மு. வெங்கிடசாமி நாட்டார்
அவர்கள் இயற்றியது

சீராரும் ஆண்டிபட்டி புரந்திடுபெத் தாச்சியெனுஞ்
செம்மல் திண்டோட்
கோராருங் கீர்த்திரச மஞ்சரிப்பேர்ப் பாமாலை
யினிதின் வேய்ந்தான்
பாராருஞ் சிவகங்கைப் பெரும்பதிவாழ் பருணிதன்பாப்
பயிலு நாவன்
நேராரும் நடையுடையன் பெரியசா மிப்பெயர்கொள்
நீர்மை யோனே

இந்நூலாசிரியரின் ஆசிரியரும் கம்பராமாயணப் பிரசங்கருமான
சிவகங்கை ஸமஸ்தான வித்வான்
மகா-ா-ா-ஸ்ரீ
செ. க. அரு. முத்துக்கிருஷ்ட்ணம் பிள்ளையவர்கள்
இயற்றிய

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

செருக்குமரியாதனத்தன் றினம்பரவுஞ் செழும்பதத்தாற்
செகுத்த நாமத்
திருக்குமரியாதனத்தன் மயற்கடனீத் துயர்விதெனத்
தேர்ந்தெஞ் ஞான்றும்

இருக்குமரியாதனத்தன் பினன்பெரியசாமி செய்யு
ளிசைத்தா னின்பாப்
பெருக்குமரியாதனத்தன் பெத்தாச்சி கீர்த்திரசம்
பிறங்கமன்னே

---

ஆண்டிபட்டி ஸமஸ்தான வித்வான்
இராமநாதபுரம் மகா-௱-௱-ஸ்ரீ
## வி. திருஞான சம்பந்தக் கவிராயரவர்கள்
இயற்றிய
## நேரிசை வெண்பா.

தேசநத்தும் ஆண்டிபட்டிச் சீர்கொள்ஸமஸ் தானத்தின்
ஈசநத்தத் தத்தாணி யின்கணமர்—நேசமன்பாற்
கோதை யணைந்தன்பு கூர்காத னன்குசொன்னான்
மேதை பெரியசா மி

---

ஸ்ரீ
கம்பராமாயணப்ரசாரகரும் நாட்டரசன்கோட்டை வித்யா
பரிபாலன சங்கத்தின் தலைமையுபாத்தியாயருமான
திரளி. ஸ்ரீமான்
## ப. ஸ்ரீ. இராமையங்கார் ஸ்வாமிகள்
இயற்றியது.

பார்த்திரச மஞ்சரித்துப் பாங்கினிமை பொன்றெடுத்த
கீர்த்திரச மஞ்சரியைக் கேட்டேனன்—சீர்த்திநிறை
அம்பொன்பெத் தாச்சிக் கரும்பெரிய சாமிகவி
கம்பனெனச் சொற்றவிதங் கண்டு.

---

நாட்டரசன்கோட்டை வித்யாபரிபாலன சங்கத்தின்
தமிழ் உபாத்தியாயராகிய கும்பகோணம் மகா-௱-௱-ஸ்ரீ
சுப. வெள்ளைவாரணம் பிள்ளை
அவர்களியற்றிய

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பஞ்சரிப்பூங் கிள்ளைமொழி பானலங்கட் பங்கயப்பொற்
பாவை நாளுஞ்
சஞ்சரிக்கு மீசனத்தந் தனைப்புரக்கும் பெத்தாச்சித்
தனவான் மீது
பிஞ்சரிக்குஞ் சியன்பெயர்முன் பின்னதிப்பேர் பெறுநகரான்
பெரிய சாமி
மஞ்சரிப்பா வைத்தமிழ்நா கஞ்செறிநா வலர்வியக்க
வழுத்தி னனே

———

சிவகெங்கை
அமெரிக்கன் மிஷன்ஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் திருக்காணையம்பதி
ஒரெழுத்து யமகவந்தாதி இயற்றியவருமான மகா-௱-௱ஸ்ரீ
S. வேலுபாத்தியாயர்
அவர்களியற்றிய

## பஃறொடை வெண்பா.

பூவினிற்றேனுள்ளதெனப் பூவிலறி வாரெவரு
நாவினிற்றேனுள்ளதென நாங்கண்டாங் காவினிற்றேன்
பாயுவய லாண்டி பட்டிச்சமீனுளும்
ஆயுந் தமிழ்க்களிபெத் தாச்சியிரா சேந்திரன்மேல்
பேரின்பமதாய்ப் பெயசாமிக்கவிஞன்
வாழ்த்திரச மஞ்சரிய வைநான் குடன்வழுத்துங்
கீர்த்திரச மஞ்சரியைக் கேட்டு

———

சிவகங்கை மகா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள்
ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ
மு. ப. கணபதியா பிள்ளை
அவர்களியற்றியது.

தலந்தருக் கொடையான் தமிழ்மணக் குடையான்
தகையன்பெத் தாச்சிமன் றனக்கு
புலந்தரு புலவர் புகன்றிட விசைசொற்
பொருத்தங்க டொடைநயம் பூண
நலந்தரு கீர்த்தி ரசத்தின்மஞ் சரியை
நவின்றனன் குளந்தைநன் னகரான்
குலந்தரு பெருமைப் பெரியசா மிப்பேர்
கொண்டவன் றண்டமிழ் வலனே

---

சிவகங்கை ஜவுளி வர்த்தகம் மகா-ா-ா-ஸ்ரீ
ஆதி. காத்தய்யா பிள்ளை
அவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

சீர்த்திரசம் பத்திற் றிகழ்புகழ்பெத் தாச்சிமன்மேற்
கீர்த்திரச மஞ்சரியின் கேயுரைத்தான்—நேர்த்திமிகும்
நற்பெரிய சாமிகவி நாவலவன் முத்தமிழ்ச்சொற்
கற்பனைகண் டோர்கள்வியக் க

---

சிவகங்கை ஜவுளி வர்த்தகம் மகா-ா-ா-ஸ்ரீ
அரு. சு. வெண்ணிமலை பிள்ளை
அவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

மன்னர்பிரான் பெத்தாச்சி வள்ளல் மகிழ்ச்சிகொள
நன்னயஞ்சேர் கீர்த்தி நவின்றனனற்—பன்னரிய
வாமிசிவ காமிபதம் வாழ்த்தி வளர்பெரிய
சாமியெனும் ஞானசர தன்

---

## சாற்றுக்கவிகள்.

இராமநாதபுரம் சிவகங்கை சமஸ்தானம் மஹாவித்வான்
ஜவாதுப்புலவரவர்களின் மரபோதயரான ஒக்கூர்
மகா-ள-ள-ஸ்ரீ

### முத்துஜவாதுப்புலவர்

அவர்களியற்றிய

### நேரிசை வெண்பா

பெத்தாச்சி மான்மகிழ பேர்பெரிய சாமிமனம்
வைத்தாச்சிக் கீர்த்திரச மஞ்சரியாம்—அத்தாச்சி
சொற்றனன்ப ரின்பரும்பர் சுற்றுறும்ப ரப்பினுற்ற
சற்றவர்க ளுங்களிக்கவே

---

சிவகெங்கை மகா-ள-ள-ஸ்ரீ

### பழ. மு. சுந்தரராஜ நாயுடுகார்

அவர்களியற்றியது.

ஏர்மேவும் செம்பதுமத் திப்பி யீன்ற
வெழின்மணியைக் கருவெனவென் றெண்ணி யென்றும்
சீர்மேவு குருகடையுற் றிலங்கும் வாவி
திகழாண்டி பட்டிநகர் சிறக்க வாழும்
நேர்மேவு ராஜசிங்க மெனும்பெத் தாச்சி
நிருபன்மேற் கீர்த்திரசம் நிகழ்த்தி ஞனை
பார்மேவும் பரன்சரணைப் பரவுங் கங்கைப்
பதிப்பெரிய சாமியெனும் பாவ லோனே

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# கீர்த்திரச மஞ்சரி.

## விநாயகர் துதி.

### வெண்பா.

நேசமிகும் பெத்தாச்சி நீதன்றன் கீர்த்திரசம்
பேசமிகுந் தென்னாட் பிறங்குமுயர்—ஈசன்
அடக்குஞ் சரத்தி னகவிருள்போக் குங்கைக்
கடக்குஞ் சரத்தின் கழல்.

காவளரும் கானாடு காத்தா னகர்புரக்கும்
பாவளரும் பெத்தாச்சிப் பார்த்திபன்றன் கீர்த்திசொல
முந்தவொரு மாங்கனிக்காய் மூர்த்திதனை யேவலமாய்
வந்தவொரு தந்தன் வனசமலர்த் தாள்மறவேன்
மண்டலமெ லாஞ்சீர்த்தி வாய்ந்துவள ரிந்திரனைக்
கொண்டலெனும் பெத்தாச்சிக் கோமான்றன் கீர்த்திசொல
சிற்பரன்பொ னம்பலவன் செஞ்சடில நற்பரமன்
தற்பரன்பொற் றாய சலசமலர்த் தாடொழுவாம்
கற்றவர்க ளேத்துமுயர் கன்னன் சிதம்பரவேள்
நற்றவத்தால் வந்த நராதிபன்றன் கீர்த்திசொல
பங்கயத்தோ னென்றும் பரவுமெழிற் கூடல்வளர்
அங்கயற்க ணம்மை அரவிந்தத் தாள்பணிவாம்
மந்தரநேர் திண்புயத்தான் மன்னவன்பெத் தாச்சியென்ற
சுந்தரனா மெங்கள் சுமுகன்றன் கீர்த்திசொல
மாமன் மருகன் மயில்வா கனன்குறமின்
வாமன் முருகன் வனசமலர்த் தாடுதிப்பாம்
திக்கனைத்தும் தக்க சிறப்போங் கியநலத்தான்
மிக்கபுகழ் பெத்தாச்சி வேந்தன்றன் கீர்த்திசொல

தாதணையுந் தண்டுளவத் தாமந் தனையணிபூஞ்
சீதமலர்ச் செல்விமகிழ் சீதரன்பொற் றாள்துதிப்பாம்
வண்டமருங் கற்பகமும் மாமணியுந் தேனுவுநேர்
கொண்டலுமே நாணக் கொடுப்போன்றன் கீர்த்திசொல
போதுறையும் வேதன் புகழ்நா வினிதிருக்கும்
மாது சகலகலா வல்லியிரு தாள்பணிவாம்

## அவை யடக்கம.

மாவேந்தர் போற்றும் மனுவேந்தன் வாருதிசூழ்
பூவேந் துயிரைப் புரக்குமகு டாதிபனும்
நீளுமதி யோங்கி நிகழ்துரைச்சிங் கேந்த்ரனுவந்
தாளுங் குளந்தைநக ரார்ந்துவள ரிந்த்ரகுலன்
வாளனைய செவ்வரிக்கண் வாமிசிவ நாயகியங்
காளபர மேஸ்பரிசெங் கஞ்சமலர்த் தாள்மறவான்
கங்கைகுலன் கல்விக் கடற்கரையைக் கண்டுணர்ந்தோன்
எங்குமிசை யோங்கு மிராமாய ணப்ரசங்கன்
வாசமல ரேந்தும் மருமன்மூத்துக் கிர்ஷ்ணனுபர்
தேசிகன்பொற் றாளைச் சிரமேற்றின மணிவோன்
மாவலவ னற்கிளையான் வாய்ந்துவந்த மற்கிளையான்
காவலவர் மெச்சுங் கனத்தா னுயர்மனத்தான்
சொற்றவரா நன்னயத்தான் றோன்றுந் தருவனையான்
உற்றவர்க் கென்ஞான்று முதவுந் தயாளகுணன்
எய்ந்தோங்கும் பில்லத்தி யேந்தலென வெத்திசையும்
வாய்ந்த நவநிதியை மைத்துனனு கச்சமைந்தோன்
பூவைவணத் தான்வயிற்றிற் பூவைவணத் தான்கமல
மாவையணி மார்பன் மலர்ப்பதத்தைச் சிந்தைசெய்வான்
அம்புயத்தாள் மேவுமெழி லம்புயத்தானுழியுற்ற
அம்புவியி னீண்டமுனை யம்புவிழி யார்க்குமதன்
மன்னும் வைணவமாம் மாமரபிற் கெப்புவிக்கும்
மின்னும் மதாணியென வேய்ந்த சரசகுணன்
அழகிய மாமணவா ளப்பெய ரோனூலிற்
பழகிய நந்நாவான் பகருமுயிர் போன்றநண்பன்

துங்க மதன்போற் றுலங்கும் வடிவழகன்
கங்கை நகர்வேந்தன் கருதுகின்ற காரியவான்

நல்லறத்தைச் செய்மனத்தான் நாகலிங்க வள்ளலெனும்
வல்லவனை நாளுமுறை மைத்துனனு மாகவுற்றோன்

மந்தரநேர் திண்புயத்து மால்ராம சாமியெனுஞ்
சுந்தரனைப் பூவிற் றுணைவனெனப் பெறுவோன்

விற்பொன் மணியால் விளங்குகிரை மாளிகைசேர்
நற்பெரு மாள்பட்டி நகர்மருவுஞ் சீர்த்தியினன்

உத்தமனும் சின்னயவேள் ஓங்குதவத் தாலுதித்த
முத்தெனும்பேர் வித்தகனை முன்னவனு மாகவுற்றோன்

பாரணியுஞ் சீர்த்தியினன் பண்புமிகு கற்பகப்பூந்
தாரணியும் மார்பன் வெள்ளைச்சாமி தவத்தில் வந்தோன்

ஆர்ந்த புவியில் அரியகவி வாணர் தமைச்
சார்ந்தணுகு வோன்பெரிய சாமியெனும் பாவலன் யான்

சுந்தரனும் பெத்தாச்சித் தோன்றலுயர் கீர்த்திதனைச்
செந்தமிழின் வல்லோர்முன் செப்பத் துணிந்ததுதான்

வேத முதலுணர்ந்த வித்தகர்முன் யாதேனும்
ஓத வறியான் உரைக்கத் துணிவதொக்கும்

விண்ணிலுயர்ந் தோங்குமகா மேருகிரி யோடுபல
எண்ணரிய மாவரைக ளொன்றுமிணை யென்பதொக்கும்

ஆரும் அரங்கும் அறையும் இளஞ்சிறுவர்
சீருடையக் கீறிலுயர் சிற்பருங்காய் வாரலரே

வாழறிஞர் நூலின் வதிந்தசெவிக் கென்னூலும்
யாழிலைசதேர் புள்ளுக் கமைந்தபறை போன்றுளதே

## தசாங்கம் நதி.

பூவேறி னோனும் புகழுமரங் கேசனைச்சூழ்
காவேரி யென்னக் கனிந்துவரு மாநதியான்

ஈடேறச் சைவமமண் ஏய்ந்தகழு வேற எதிர்த்
தேடேறத் தோன்றி யிலங்குவைகை மாநதியான்

மலை.

தேனயந்த சொல்லாருந் தேவருமே வப்பருதி
மானமர்ந்து நிற்ப மருவும் பிரான்மலையான்
மாகத்தின் வில்லை வளைத்து வனவேடர்
நாகத்தை யெய்ய நயக்கும் பிரான்மலையான்
அம்புலியின் மானை யடர்ந்துநெடு வாலடித்து
வெம்புலிகள் தாவுகின்ற விண்டோய் பிரான்மலையான்

நாடு.

மன்னற் கனிரசமும் மாவரைத்தே னும்பெருகிச்
செந்நெற் பயிர்வளர்க்கும் தென்பாண்டி நாடுடையான்
மஞ்சார் பொழின்மலரின் வண்டுழக்கத் தேன்பெருகிச்
செஞ்சாலி நெல்வளர்க்குந் தென்பாண்டி நாடுடையான்

நகர்.

காத்தான் கதிர்த்தேர் கரப்பவுயர் காணடு
காத்தா னெனவே கழறுங் கவினகரான்
மாவிருந்து நாளும் மருவுமணி மாளிகைமேல்
மாவிருந்து கூவுகொடி வாய்ந்தோங்கும் மாநகரான்
எந்தவுல கத்தோரு மேறுதற்கு நற்றவஞ்செய்
அந்தவுல கத்தோரு மாசைகொளு மாநகரான்
பூமான் முகமெனவும் பொன்மா னரங்கெனவும்
பாமானிலமெனவும் பன்னுமெழில் மாநகரான்

மாலை.

கானார் குழன்மடவார் கண்ணிணைக ளென்னும்வரித்
தேனார்வங் கொண்டுலவுஞ் சீரகப்பூ மாலையினான்

யானை.

செங்களத்தி லங்கெதிர்த்த திண்பகைக்கு லந்துவைத்து
மங்களங்கொ ணர்ந்துகந்து வந்தமர்ந்த குஞ்சரத்தான்

பரி.

தடநெடிய வடகுவடு சரியபட மிகுகொடிய
விடவரவு வுடனெளிய விரைவினட மிடுபரியான்

## குடை.

விண்ணிடையே தோன்றி விளங்கு மதிமிகையென்
றெண்ணுறவே தண்ணிழல்தந் தேறுமிருள்நீத்தங்
கேய்ந்த தமதுகுல மெல்லா மதில்மருவ
வேய்ந்து குறைதலின்றி மேவுமதிவெண் குடையான்

## முரசு.

மாமுழக்கால் வாரிமுகில் வாயடைப்பத் தெவ்வர்மனந்
தாமுழக்கிக் கப்பந் தரவொலிக்கும் வார்முரசான்
வெள்ளம் பறவை விலங்கினொடு வேசியர்தம்
உள்ளமுமே யோர்வழியி லோட்டுமுய ராணையினான்
பாயும் புலியும் பசுவும் ஒரு துறையில்
நேயமுடன் கூடியென்றும் நீரருந்து மாணையினான்
நீதி நெறிய தனில் நிற்பவரைக் காத்தருளிப்
பாதகஞ்செய் துற்சனரின் பண்படக்கு மாணையினான்

## படை.

சொல்லுமுனம் தெவ்வர்களைச் சூழ்ந்து பெரும்படையில்
வெல்லுகின்ற வல்லமைசேர் வீரப் பெரும்படையான்

## கோட்டை.

வைகுவித்த பூவுலக மைந்தரெலாஞ் சென்னியின்மேற்
கைகுவித்துப் போற்றுங் கனகமணிக் கோட்டையினான்

## கொடி.

அந்நா ளமுதைநினைந் தண்டர்பதி சென்றதுபோல்
இந்நாளும் செல்லற் கெழுங்கெருட கேதனத்தான்
முன்னாழி பாய்ந்தரிய மொய்குழலிக் கின்பமிக
மின்னாழி தந்தோன் விளங்கும் பதாகையினான்
வெங்கட் பகைஞரெனும் வேழம்வெருண் டோடவிளஞ்
சிங்கவுருத் தீட்டிச் சிறக்கும் பதாகையினான்

## வாயில்வளம்.

சங்க முழங்கத் தவில்முழங்க முத்தமிழின்
சங்க முழங்கச் சதுர்முழங்கும் வாயிலினான்

மங்களப்பல் வாத்தியங்கள் மாமுரச மேழிசைகீ
தங்களொடு கைத்தாளந் தான்முழங்கும் வாயிலினன்
பாலிருக்குஞ் செஞ்சொன்மொழிப் பாவையுடனேயிரு கட்
சேலிருக்குஞ் செந்திருமான் சேர்ந்தோங்கும் வாயிலினன்
வேதியர்க்கும் ஆதுலர்க்கும் வேண்டுமென தானமெந்தப்
போது முதவிப் புகழ்பெருகு வாயிலினன்
சென்னி மகுடந் திகழச் சிவிகையின்மேல்
மன்னர்மன்னர் காண மருவுபெரு வாயிலினன்
பாடும் புலவோர்தம் பைந்தமிழ்ச்சொற் பாவுணர்ந்து
நாடுநிதி யாடைபெலாம் நல்குமுயர் வாயிலினன்
தாலமதில் ஏற்போர் தமக்குதவி முன்றினிலெக்
காலுமசை யாதமணி கட்டிவளர் வாயிலினன்
மன்னியுயர் மாற்றலர்கள் மாமலர்க்கை கூப்பிநிதம்
சென்னி வணங்கித் திறையளிக்கும் வாயிலினன்
பஞ்சகலி யாணிப் பரிகள்நட மாடிவரக்
குஞ்சரங்கள் சேர்ந்து குலவுமணி வாயிலினன்
தெள்ளியதோர் யாழின் செழுஞ்சுவையங் கேசிறப்பப்
புள்ளிமயி லாடிப் பொருந்துமெழில் வாயிலினன்
தேனுலவு தாருவினைச் சேர்ந்தொளிரு மாணினம்போல்
மானுலவி நாளும் மருவுமுயர் வாயிலினன்

## நாயகவாசி கூறியது.

கேள்விதனிற் றேர்ந்துயர்ந்த கேடில் கௌசிகற்கு
வேள்விதனைக் காத்தளித்த விற்பனன்பெத் தாச்சிமன்னன்
சொல்லெடுக்கப் பல்லோர் துகளெடுக்க நன்மிதிலை
வில்லெடுக்க மேவுமுயர் வேந்தன்பெத் தாச்சிவள்ளல்
ஆதித்தன் சேயை அடைந்த விபீடணனைச்
சோதிக்கா தாண்டருளுந் தூயன்பெத் தாச்சிமுகில்
ஆளைபா யின்றே அடைந்துடைந்த ராவணபோங்
நாளைவா வென்றருளும் நாதன்பெத் தாச்சிமன்னன்
ஓங்கும் உலகதனில் உற்றபல பாஷையுடன்
ஆங்கிலமுந் தேர்ந்தே அகமகிழு நன்னயத்தான்

நாச்சுவையி தென்ன நயந்தெரிந்து நாடுதமிழ்ட
பாச்சுவையி னாய்ந்து பழகும் திருமனத்தான்
பாண்டிப் பதியாம் பணிதனக்கோர் நாயகமாம்
ஆண்டிபட்டி மாநகரை ஆளும் அமரேசன்
தன்னூரி லென்றுந் தலமுதல்வைப் பாயவெலாந்
தென்னூரின் வைத்துச் சிறக்குமுயர் சீர்த்தியினான்
எத்திறத்தி னோர்க்கும் இசையுஞ் சிதம்பரத்திற்
சத்திரத்திற் சாருமன்ன தானக் கொடியுடையான்
நேரும் படிப்பை நினைந்துவரு வோர்க்குநிதம்
சேரும் பொருளுதவி செய்து வருமிடத்தான்
துங்கமிகு கூடல்தனிற் றோன்றும் இனியதமிழ்ச்
சங்கமதைக் காக்கும் தயாள குணசீலன்
பேசுங் கரூரிற் பிறங்கி யொளிர்பசுப
தீசுவரன் கோவிற் கிசைந்த தலைமையினான்
என்றதொரு ராஜசிங்க மென்ற பெருஞ்சிறப்பைத்
தோன்றுறவே சார்ந்து துதிக்கும் பலநலத்தான்
கத்துகட லாணை கடந்தாலும் நற்றருமம்
சுத்தநிலை பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்
மன்னுகலை மாமதியும் வாய்ந்த கதிரோனும்
துன்னுதிசை மாறிடினும் சொன்னமொழி மாறாதான்
தந்தரத்தை நேராத் தரத்தினா லாழிபுக
மந்தரத்தைப் போக்கிவரு மற்பொருது திண்புயத்தான்
பஞ்ச தருக்கடனைப் பஞ்சையென வேயுரைக்கத்
தஞ்சமென வந்தோர்க்குத் தந்தருளும் செங்கரத்தான்
திங்கணுத லார்தமது சித்தமதின் மையல்கொண்டு
துங்கமட லேறத் துணியு மணிமார்பன்
பண்டலையிற் றோன்றிப் பரன்றலையின் மீதார்ந்து
மண்டலத்தி லின்பம் வளர்க்கும் மதிமரபான்
செய்யகலை யாவுந் தெளிவுறத்தேர்ந் தின்பமிகும்
மெய்யடியா ருள்ளம் விளங்குசிவ கோத்திரத்தான்
பண்ணாட்டஞ் செஞ்சொன்மிகு பாவலருங் காவலரும்
உண்ணாட்டத் தக்க வுயர்நாட்டுக் கோட்டையினான்

காவிரிப்பூம் நாட்டைக் கடந்தேபொற் றேரேறிப்
பாவிரிந்து நாளுமுயர் பாண்டிவள நாட்டுவந்தோன்
பூழியர்கோன் வேண்டமணிப் பொற்றேரின் மீதுவந்த
ஏழிசைநூல் வல்லோர்க ளேத்துமுயர் மாவணிகன்
விண்பதியி லென்றும் விளங்கு மதியமென
மண்பதியி னெங்கும் வணிகர் குலதிலகன்
அண்டர்பணி யேழ்கோவிற் கார்ந்த மதாணியெனக்
கொண்டவிளை யாத்தக் குடிக்கோ விலையுடையான்
சித்திமுத லாய சிறப்பனைத்து மேயளிக்கும்
நித்தியகல் யாணி நிமலப் பதம்பணிவான்
பூவளமும் ஓங்கும் பொருள்வளமும் பாரதியின்
மாவளமுங் கொண்டு வளருங் கிளாமடத்தில்
வேதாந்த யோக வியன்மரபிற் றோன்றியுயர்
நாதாந்த மோன நிகு ஞானமணி யாம்முதலைச்
சந்ததமுந் தன்குருவாய்ச் சார்ந்துநறுந் தண்கமலச்
சுந்தரப்பொற் பாதந் தொழுதேத்தும் பூசிதவான்
பையார் பணிச்சுமையிற் பார்த்திபன்றன் செய்தானக்
கையால் நனையாத கையே தெனக்கொடுத்தோன்

பிரபு கொலுவிருத்தல்.

ஐந்தருவீ தென்ன அளிக்கும் சிதம்பரவேள்
மைந்தனென வந்த மகபதிசெம் பீரபதி
நம்பிரகு நாதன்வர நாடுமிலக்குவன் போல்
தம்பியென முத்தயவேள் சாரவரு தாஷ்டீகன்
பம்பு மலர்க்கணையைப் பற்று வடிவமதன்
நம்பினவர்க் கென்றும் நயமுதவு நற்குணவான்
கோதுபதி யாமனத்தன் கோகனப் பூவினுயர்
மாதுபதி மார்பன் மகபதிசெத் தாச்சிவள்ளல்
சொல்லுமுயர் மார்க்கம்வந்த தூயநிதி மேலோங்க
நல்லறத்தைச் செய்துமகிழ் நாளதனி லேயொருநாள்
நன்மைதருங் கங்கா நதித்தீர்த்தந் தானுடிப்
புன்மைதவிர் வெண்ணீறு பூசி மணிபுனைந்து

கந்தன் குகன்கடம்பன் காங்கேயன் செவ்வேள்சம்
பந்தன் சிவந்த புதுமமலர்த் தாள்பணிந்து
முக்கனியும் முல்லைமுகை மூரல் பொரிக்கறியும்
தக்க விருந்துடனே தானின் புடனருந்தி
தாம்பூல முண்டுநறுஞ் சந்தனம்பன் னீருயர்ந்த
தாம்புனுகு சவ்வா தணிந்து மலர்புனைந்து
தங்கவரை ஞாண்மருங்கிற் றான்றரித்துக் கைவிரற்குத்
துங்கநவ ரத்னங் துலங்குகணை யாழியிட்டு
ஆணிக் கனக மதனா லிழைத்தொளிரும்
மாணிக்கம் பச்சை வயிரப் பதக்கமிட்டு
வாசமிகு பூந்தெரியல் வாசவனைப் பாஞ்செழிய
தேசமன்னர் போற்றுமுயர் சிம்மாச னாதிபதி
சந்திரகாந் தத்தாற் றலங்கள் பலவமைத்துப்
பந்திபந்தி யாகப் பவளத்தாற் றாணிறுத்தி
செந்தனிமா ணிக்கச் செழும்பெரிய போதிகை சேர்த்
திந்திரநீ லத்தா லிசைத்து முய ருத்திரங்கள்
வச்சிரத்தாற் றாளும் மரகதத்தால் நற்கதவும்
பச்சைபல மேவப் படைத்துப் புறமுழுதும்
வெண்சுதையாற் றீற்றி விளங்கியொளிர் மாளிகைபாற்
றண்கடல்மேற் றோற்றும் தரங்கமே போன்றுளதால்
எள்ளரிய பொற்றகட்டா லேய்ந்த திளவெயில்கள்
வெள்ளி வரைமேல் விரிந்ததெனத் தோன்றியவே
இச்சையுடன் கற்பகநாட் டேய்ந்திலங்கு மானினமிப்
பச்சையொளி தம்மைப் பசும்புலென வேகறிக்கும்
என்ற பகலும் இருளுமுண ராததினால்
தோன்றும் அமரரெனத் தோன்றுவா ரெவ்விடத்தும்
விண்ணாடி னர்க்கும் விரும்பும் புவியினர்க்கும்
கண்ணாடி யென்னக் கருதியசை யாதுநிற்பக்
கங்குல்பக லின்றிக் கதிரொளிக ளேபரப்பி
எங்குந் துலங்குமெழி லின்னசபா மண்டபத்துள்
மன்னுங் கலெக்டரொடும் வாய்ந்த கனவான்களொடும்
பன்னு மறையோர் பலருமிரு பக்கலுற

கற்றவர்கள் போற்றக் கவிவாணர் வாழ்த்தவுயர்
வுற்றவர்கள் நல்லோ ருறவினருந் தற்சூழக்
கந்தருவர் போற்றிக் கனியுஞ் சுவைமுதிர்ந்த
விந்தைமிகும் சாரந்தா வீணைபொரு பாலிசைப்ப
கன்னியர்க ளாடக் கவரியிரு பாலிரட்டத்
துன்னிவரும் கட்டியர்கள் தோன்றும் புகழுரைப்ப
வந்தியர்கள் பாடப்பல் வாத்தியங்கள் நின்றொலிப்ப
அந்தரவா னத்தா ரரம்பையரு மார்த்திகொளத்
தேடருஞ்சீர் பெற்றுயர்ந்த தேசார்ந் திலங்குகின்ற
ஆடவரும் பெண்மை யவாவுந் திருவழகும்
அன்புங் குணமும் அறனறிவு நீதியுடன்
இன்புமிடல் வீரமுமே யேய்ந்துபணி கேட்பத்
தாயாகி யன்பிற் றவமாய் நலம்பயப்பிற்
சேயா யுதவிவந்து சேர்ந்தவர்க்கோ ராதரவாய்
காட்டும் பொறையிற் கனிந்த வுருவெனவும்
நாட்டு மழகினுக்கோர் நாயகமீ தென்னவுநாம்
ஈட்டுந் தருவெனவும் எம்மனோர்க் கெப்பொருளும்
நீட்டுதற்கா யிப்புவியில் நேர்ந்த நிதியெனவும்
நண்ணுசுதிர் மேவும் நவமணியி னற்குயிற்றி
பண்ணுமரி யாசனத்தில் பார்த்திபனும் வீற்றிருந்தான்
இன்னவலங் காரத் திசைந்தநம்பெத் தாச்சியெனும்
மன்னர்பிரான் சித்தம் மகிழ்ந்திருக்கும் வேளைதனில்

## பிரபு வேட்டைக் கெழுதல்.

மேருவெனத் தோன்றி விளங்கும் விலங்கினங்கள்
சாரும் பிரான்மலையின் சாரல் தனையடைந்து
தான்வேட்டை யாடவுளந் தன்னிலெண்ணிக் கட்டியரைக்
கான்வேட்டைக் காரருக்கும் காசினியி லோங்கியநம்
தேசத்தின் மேவலுறும் சேனை பதிகளுக்கும்
தேசுமிகு வீரருக்கும் செப்பு மெனவுரைத்தான்
இந்தவித மாவுரைசெய் தெங்கோன் அரண்மனைக்குட்
சுந்தரமாய்ச் சென்று துலங்குபல பூணணிந்து

கச்சை யிடையிற் கனமாய் வரிந்துகட்டி
வச்ரமணிப் பொற்கவசம் வாய்ந்த வுடற்கணிந்து
சீத மதிவதனச் சேயிழையார் காதல்கொளச்
சோதிமிகு முத்துத் துராயுடன்பொற் பாகைகட்டி
துப்பாக்கி கத்தி சுரிகைசமு தாடிறுக்கி
அப்பருத் தூணிமுனை அம்புவில்லுங் கைப்பிடித்துப்
பொங்கு மதவேழப் பொலிவினைக்கண் டோங்குவரிச்
சிங்கக் குருளைமிகச் சீறி யெழுந்ததென
ஆம்பரிதித் தேர்மா வடங்கக் கதிமிகுந்த
வாம்பரியின் மீதேறி வாட்படையுங் கைப்பிடித்துச்
சீர்விஜய மாமாது திண்டோளில் நின்றாடப்
போர்விஜய னென்னமணிப் பொன்முகப்பு வாசல்வந்தான்
அல்லி மலர்க்காந்த ளங்கை சிவப்பேற
மெல்லியர்கள் நின்றிருபால் வெண்கவரி வீசிவர
கன்னியர்கள் மைக்கட் கருங்காமர் வண்டினங்கள்
பொன்னவிர்பூண் மார்பிற் புனையலங்கல் மேற்புரள
நித்திலத்தின் வெண்குடைகள் நீழல்செய ஆலவட்டம்
பத்திபத்தி யாய்ச்சுருட்டி பைங்கதிரைப் போய்மறைக்க
மண்டலத்தில் மன்னன் வழங்குதலைப் பார்த்தொளித்த
வொண்டருவைத் தேடுதல்போ லொட்டகம ணூந்துவர
தாகத்தாற் கைமாவுந் தன்கரத்தை யேநீட்டி
மேகத்தை யேபொதுக்க மேவி வருவதொக்கும்
ஆயும் புடவியைச்சூ ழாழிதனி லேமிகுந்து
பாயும் அலையிதெனப் பாய்பரிகள் சென்றனவே
எங்கும் முழங்கும் எழிற்பே ரிகையொலியுஞ்
சங்க வொலியுஞ் சலதியொலி யோடெதிர்க்க
மேளவொலி தாளவொலி மேவுமெக் காளவொலி
காள முகிலின் கனமுழக்கை வாயடைப்ப
சல்லரிதம் பட்டைபம்பை தண்ணுமைத டாரியுடன்
மல்லரியுந் தக்கைபல வாத்தியமுந் தாமுழங்க
வில்லெடுத்து மம்பெடுத்தும் வேலெடுத்தும் வாளெடுத்தும்
சொல்லெடுத்த வேகத் தொடுவீரர் கொண்டுவர

கத்து திரைக்கடல்போற் காலாட்கள் கத்தியுடன்
குத்துசமு தாடுங்கைக் கொண்டுமுன மேநடக்கத்
துப்பாக்கி கோடிவருந் தோமரம்பா லாகோடி
தப்பாமற் பாயுஞ் சரங்கள் நவகோடி
ஈட்டியொரு கோடி யெறியீட்டி வாள்கோடி
தாட்டிகமாய்க் கொண்டு தளவீரர் தானடக்கத்
தக்கமதி மந்த்ரிகளும் சார்ந்துவரு கர்த்தர்களும்
மிக்கவதி காரிகளும் வீரியப்ர தாபர்களும்
மெச்சுகவி வாணர்களும் மேவுசுற்றத் தார்களுநல்
லிச்சையுடன் கூடிமிகுந் தேகமாய் முன்னடக்க

வேட்டை வீரர்
பராக்கிரம முரைத்தல்.

மத்தக் கரியின் மருப்பொசித் தெங்கோமான்
நத்துமுயர் தண்டிகைக்கு நாமுதவ வேண்டுமென்றும்
மென்கவரி வால்துணித்து மேவியநம் நாயகற்கு
முன்கவரி வீசியிந்த மூதுலகில் வாழ்வமென்றும்
செங்கமலப் பீடத் திருமா துலவுபுயத்
துங்கன்பெத் தாச்சியெனுந் தோன்றல் சமுகமிசை
சிங்கந் தனையடர்ந்து சேணுலவு பாரதனிற்
பொங்கமுறு மாவீரப் பொற்கடயம் வாங்கவென்றும்
தான்மதத்தா லோடிச் சலியா துயர்மிருக
மான்மதத்தைக் கொண்டு வனிதையர்கட் கீயவென்றும்
காண்டா மிருகமதைக் காவலன்மு னேகொணர்ந்து
வேண்டியசம் மானம் விருதுபெற வேண்டுமென்றும்
தந்தமனத் தொவ்வொன்றைத் தானினைந்து சென்றேகும்
முந்துவெடிக் காரர் முனைவீரர் முன்னடக்க
கச்சைகட்டும் சல்லடமும் காலிலிடு தோலடியும்
தச்சுருவும் வில்லம்பு தக்ககவண் சாலமுடன்
காட்டகத்தில் வாழும் கரடிபுலி பன்றிகளின்
தாட்டிகத்தைப் போக்கத் தகும்பெரிய ஞாளியொடும்
செம்பட்டை மீசைதிகழ் செங்கண்வன வேடுவர்கள்
குப்பிட்டு வாய்புதைத்துக் கொற்றவர்க்கு முன்னோடச்

சேனைப் பெருக்கிலெழுஞ் செந்தூளி மேலெழுந்து
வானை யடைத்து வருங்கதிரைத் தான்மறைக்கப்
பொங்கும் புகழ்பெருகும் பொற்புறுயபெத் தாச்சியெனும்
எங்கள்பிரான் வேட்டைக் கெழுந்துவரும் மார்க்கமதில்
பச்சைநிறக் காடையிடம் பாய்ந்தே மரமேற
உச்சிக்கொண் டைச்சேவ லொண்பே டுடன்புணரத்
தேசு மதிவதனச் சீமான்பெத் தாச்சியென்ற
போசனுமே கண்டுடலம் பூரித் தகமகிழ்ந்தான்
சொன்னயஞ்சே ரெங்கள்குலத் தோன்றற் கிதுசமயம்
நன்மைதரத் தக்கதிந்த நற்சகுன மென்றுணர்ந்து
மன்னவன்முன் னின்றொருவன் வாய்புதைத்துக் கைகள்கட்டி
அன்னெறியி லுற்ற அருஞ்சகுனச் செய்திசொல்வான்
வாய்ந்தபெருங் காடையிட மாகவந்த காரணத்தால்
ஏய்ந்தவன வேட்டை யினிதாய்க் கிடைப்பதின்றி
வாரணமோர் பேடைதனை மன்னி மருவியதாற்
காரணனே யாங்கொருபெண் கைவசமே யாகுமென்றான்
அன்னவன்சொற் கேட்டுவந்தங் கார்ந்தபெருஞ் சேனையுடன்
மன்னும் பிரான்மலைக்கு வந்து வளமனைத்தும்
அம்மலையி லோர்பா லமர்ந்தங் கினிதிருந்து
செம்மலுறக் கண்டமலைச் சீரிற் சிலவுரைப்பாம்

## மலைச் சிறப்பு.

வம்பிருக்கும் நற்றருவின் வாய்ந்த தழைபொடித்துத்
தும்பியுயி ரன்ன துணைப்பிடிக்கங் கேயளிக்கும்
உண்மலரை நீத்ததும்பி யோர்ந்துபுதுத் தேனுதவுந்
தண்மலரென் றேவானத் தாரகையிற் றுவுமன்றே
கூனடுத்த வான்பிறையின் கோடுகுத்திச் சார்ந்துவரும்
தேனடுத்துப் பாய்ந்து செழிக்கும் பலவளமும்
தேனாறு பாய்ச்சிநறுஞ் செந்தினையைச் சேர்ப்பதன்முன்
வானாறு பாய்ச்சி வளர்ப்பார்கள் ஐவனத்தை
இந்துவெனு மாடிதனி லேய்ந்தஇரு மாதர்களும்
சுந்தரத்தைப் பார்த்துத் துலங்கியிரு பாலும்நிற்பார்

வீங்குங் குறத்தியர்தம் மென்னுதலோ டொண்மதியை
வாங்கியொப்பக் கண்டு மகிழ்வார் குறவர்களும்
வாரணத்தைக் கொன்றஊந்த வாளரியின் காற்சுவட்டோ
டாரணங்கின் செம்பஞ் சடிச்சுவடு மேயுளது
சார்ந்தமின்னார் காற்குழம்பு தங்குபளிக் குப்பாறை
வார்ந்த நறவிருக்கும் வள்ளமெனத் தோன்றுமெங்கும்
ஏந்திழைவிண் மாதர் இசைந்தகரப் பூண்வாங்கிக்
காந்தளுக்கே பெய்துயர்ந்த கைகளோ டொப்பறிவார்
வானடுத்தார் நீத்த மணிக்கோவை யைக்கடுவன்
தானெடுத்துப் பூணமந்தி தான்கண் டுவக்குமன்றே
தண்படியும் நீரிற் சமைசுனையென் றோராது
வெண்படிக மென்றே மிதித்தறிந்து நாணிநிற்பார்
இன்னவளம் பார்த்தங் கெழுந்தபெருஞ் சேனையுடன்
மன்னனுமே லோங்கி வளர்ந்தவனச் சாரலுற்றுக்
கங்கை பாகன்சீர் கருதிமயத் தேயுதித்த
மங்கைபா கன்செம் மலரடியைத் தான்பணிந்து
சேந்தன் கடம்பணியுந் தெய்வயானைக் கினிய
காந்தன் கடம்பணியுங் கஞ்சமலர்த் தாள்நினைந்து

## வேட்டையாடல்.

மொய்த்தபெருங் கானகங்கள் முற்றும் வலைவேய்ந்து
கைத்தடியும் வில்லுமுற்ற கானவரைச் சூழவிட்டுத்
தாவும் புரவி தனிலிருந்து கீழிறங்கி
மேவுகொம்பு பேரிடங்கா மேகவொலி போலதிரச்
சொன்னத்துப் பாக்கிகொண்ட சூரர்களை முன்னிறுத்தி
மன்னனிற்க வீரர் வனத்தைக் கலைத்துவிட்டார்
சிங்கங் கரடிபுலி சீறியெழு பன்றியுடன்
அங்கங் கெழுந்தே அலமந்து தானோட
வேலெடுத்துச் சேர்வாரும் வில்லெடுத்து நேர்வாரும்
கோலெடுத்துப் பேர்வாரும் கொல்லத் துணிவாரும்
சிங்கம் வரிவேங்கை செந்நாய் முயல்நரியின்
தங்களுருக் கெட்டுத் தலைகுலையச் செய்வாரும்

ஆயகா லத்திலகத் தச்சமின்றியே திணிந்தி
போயதொரு யோகியைப்போற் போத்தொன்று போனதுவே
ஈட்டி முனையா லெதிர்த்துவந்த பன்றிதனக்
கூட்டி முறிந்தங் குடல்பதறி வீழ்ந்ததுவே
பாவலர்பா விற்குப் பயந்தோடும் லோபியரிற்
காவல்தனை மீறியொரு காரா நடந்ததுவே
பாட்டினையே கேட்டுப் பதறுமதி யீனரைப்போல்
வேட்டினையே கேட்டு மிரண்டமத மாக்களெல்லாம்
சேயிழையார் கண்வலையிற் சிக்கியுழல் காளையர்போற்
போய்வலையிற் சிக்கியொரு புல்வாய் மருண்டதுவே
வாரண்டைக் கண்டு மதிமருண்ட மைந்தரைப்போல்
வாரண்டை நின்று மருண்டசில மாக்களெல்லாம்
செப்புற்ற வீரர் செலுத்தும் கணைபதனாற்
குப்புற்று வீழ்ந்து குலைந்த பலமிருகம்
தம்பட்டை யோசையினாற் றாழ்ந்தசிறைப் பட்சியெலாம்
அம்பிட்ட மாவோ டமரர்பதி போய்மறைய
இன்னவிதங் கானகத்தி லேந்தல்செயும் வேட்டையிலோர்
பொன்மான் வலையிற் புகுதாம லேதாவி
வில்லம்புக் காரருக்கும் வேடருக்கும் ஞாளிகட்கும்
வல்லயம்வேல் வாள்பிடித்த மல்லர்கட்கு மெட்டாமல்
நீடுபுகழ் பெத்தாச்சி நீதனைச்சேர்ந் தாரைவிடுத்
தோடுங் கலிபோ லுயர்வனத்தி லோடினதே
மாரீச மின்றிவந்த மான்பின் றொடர்ந்தேகிப்
பாரீச னென்றபெம்மான் பாய்ந்துகணை யாற்றுணித்தான்
மாயமான் பின்னவன்போய் வாய்ந்ததிரு மானைவிட்டான்
போயமான் பின்னிவன்போய் போந்ததிருமானை நட்டான்

## பிரபு சேனையைவிட்டுச் சோலையைக் காணல்.

இந்தவிதம் வந்தநம தேந்தலுயர்ந் தேமிகுந்த
சந்தமிகு காவிற் றனித்தே யிளைப்பாறிச்
சீதமிகு கஞ்சஞ் சிறந்தநீ லோற்பலமும்
தாதவிழப் பூத்த தடஞ்சுனைநன் னீரருந்தி

மந்தாரங் கோங்கு மகிழங் கடம்புமிணர்
தந்தாரம் பாடலமும் தண்மலரைத் தூவநறும்
புன்னைமரம் மன்னர்வரப் பொன்னெடுத்துச் சிந்துதல்போல்
துன்னுநறுந் தாதுகுத்துத் தூமலரைச் சிந்தினவே
கற்பகத்தே னுய்ந்து கருவண் டினம்பேடைக்
கற்புதமா யூட்டும் அருமை தனையறிந்து
சத்தமிட்டுச் சோலைத் தருவைக் கரிகள்வெள்ளை
மத்தகஜத் துக்களித்து வாங்கநறும் பைந்தருவை
முக்கால முந்தோர் முனிவரரு மேங்கமதன்
எக்காளந் தோன்றி யியம்ப நறுங்கீதம்
மாவினங்கள் பாட மயிலினங்கள் கூத்தாடக்
காவினத்தில் மந்தி கனைத்துச் சிரந்துளக்க
காந்த னுரைதவறுக் காரிகையார் கானகத்தில்
வேந்தன் புகழைபவா மேவிப் பயிற்றுவதால்
மஞ்சரிக டோறும் மருவுமிளம் பைஞ்சிறைகொள்
அஞ்சுகங்கள் பாட அரசன்கேட் டுண்மகிழ்ந்து
துங்கவரி நாணேற்றித் தோன்றுங் கரமதனிற்
செங்கரும்பை யேந்தாச் சிலைமதனைப் போலவந்து
பூவேந்தர் மெச்சும் புகழ்வேந்தன் பூலோக
தேவேந்த்ர னென்னவனச் சிங்காரம் பார்த்திருந்தான்

## பெண்ணினல்லாள் சிறப்பு.

அஞ்சம்பி னனும்வெட்கும் அண்ணலங்கு வீற்றிருக்க
அஞ்சம்பி னகன்டை யார்ந்தவளின் செய்திசொல்வாம்
வார்ந்த வெழிலம் மலைச்சா ரொருபாங்கர்
ஆர்ந்த புவியாள் அரசர்க் கரசனெப்பான்
மாதமும் மாரி வருஷிக்கும் மாநகரான்
தாதளையும் மௌவல்மலர்த் தாரினன் சீர்த்தியுளான்
தன்னுயிர்போல் வாருதிசூழ் தாரணியிற் றேன்றுபல
மன்னுயிரைக் காக்கும் மகபதிசு காதிபதி
நன்னூ லிதிகாசம் நான்மறைகள் மற்றுமுள
பன்னூ லிற்றேர்ந்த பனக வரசையொப்பான்

மோகபுரி யைப்புரக்கும் மொய்ம்பன்றிங் கட்குடையான்
வாகமர்வி வேகனெனும் வள்ளல் திருநிகர்த்த
சம்போக வல்லியிவர் தாம்செய் தவத்துதித்த
அம்போ ருகத்தான் அமைத்துயர்நாற் சாதியினுள்
நண்பகத்தே கொண்டெந்த நாளும் நறுமணஞ்சேர்
செண்பகத்தை யொத்தவுடற் றேசார் பதுமினிப்பெண்
அம்பு விழியா ரணங்குக் கணங்குசெய
அம்புவியிற் றேன்றும் அமிர்தகுண பூஷணியாள்
எக்காலு மோவியர்க ளேங்கியெழு தாதுநிற்ப
முக்காலுந் தேர்ந்து முதிர்ந்தெழுது காமசித்ரம்
ஆர்ந்த புவியில் அயனர் அரிவையர்கள்
வார்ந்த அழகின் வரம்பிற் கமைத்தமணி
பங்கமுறு பாம்பின் படத்துறையா தாடவர்க்காய்
அங்கசவேள் தம்பா லடுத்துறையும் மோகரத்னம்
பார்க்க மதிக்கப் படாதுபார்ப் பார்மனதை
யீர்க்கமதன் மோலிக் கிசைத்தமைத்த சீவரத்னம்
தூய வலையிற் றெடரா வளையமையா
மாய வலையில் வளைக்குமுயர் வானமுத்து
சேர்த்தமதன் அஞ்சடக்கித் தேர்ந்த முனிவரர்கள்
பார்த்தவுட னேடைப் படைத்தலைவி யாம்பதுமை
கோடாது தேய்ந்து குறுகா தனுதினமும்
ஓடா துலகி லுயர்ந்தொளிரு மாமதியம்
விண்ணுள் பவரை விரிஞ்சன் அரிமுதலாம்
மண்ணுள் பவரை மயக்க வருமமுதம்
கண்டிரண்டு போதுங் கருதிவரக் காளையர்கள்
வண்டிரண்டு தோன்றி மருவுமுயர் சண்பகப்பூ
சொல்லிரசம் காமச் சுகரசம்நற் செய்கைரசம்
பல்லிரசம் சார்ந்து பரவும் நறியகனி
காமன் றனது கரத்திலணு காவளைக்கா
மாமன் றனையும் வளைக்க வருகரும்பு
மெய்வெளுத்து வேதனையே மேவா துயர்ந்தநடை
ஐயமிலா அய்யர் அயர நடக்குமன்னம்

நேர்த்தியுட னோடாது நேர்குகன்பா லோடாது
பார்த்திபரை யாட்டுதற்குப் பாரி லுதித்தமயில்

வாங்குதிரை யாகாது மாதர்கர மேவாது
ஒங்குதிரை தாங்க வுதித்த கிளிப்பேடு

ஆகங் கறுத்துலகி லார்ந்து திரியாமல்
தேகஞ் சிவந்தணையிற் சேர்ந்து வளர்ந்தகுயில்

தானரங்க வோடிச் சலியா திலையாமல்
வானரங்க மாடி மருவு மொருதிருமான்

சந்தனமும் பன்னீரும் சவ்வாதுங் குங்குமமும்
கந்த மிருகதம்ப கஸ்தூரி யும்புனுகும்

மல்லிகையும் முல்லை மலருமிரு வாக்ஷியுடன்
அல்லிபிச்சி செவ்வந்தி யார்ந்து மருவளர்ந்து

கோங்கரும்பு வள்ளை குவளை குமிழினொடு
தீங்கரும்பு சைவலமுஞ் செங்காந்த ளுங்கழையும்

பூகங் கதலியொடு பொற்று மரைதாங்கி
ஆகம்பொன் போர்த்தும் அரியபுவி யிற்புகுந்து

தவரும் மயலாய்த் தயங்க மனதைக்
கவரும் பெரியதொரு காமப்ர வாகநதி

இன்னமிர்த சஞ்சீவீ யென்னுமுயர் தோழியைப்பார்த்
தென்னிடது கண்ணோ டிடத்தோள் துடிக்குதென்றாள்

ஏந்து மெழிற்சகிகேட் டெந்தாயே யிக்குறிகள்
காந்தருவம் வந்துனக்குக் கைகூடு மென்றுரைப்ப

அந்த வுரைகேட் டமிர்தகுண பூஷணியும்
புந்தி மகிழ்ந்துநறும் பூவெடுக்க வேகினேந்தாள்

ஓர்ந்தமட மாதுக் குயர்ந்தமஞ்சள் நீராட்டிச்
சார்ந்த புனுகினொடு சவ்வாது மேதிமிர்ந்து

மாசகன்ற தூயநறு மன்றற் புகையூட்டி
வாச மிருதயிலம் வார்குழலின் மேற்றடவி

பொட்டார் நுதலாட்குப் பூவையர்க ளோங்குரத்னப்
பட்டாடை வேய்ந்து பணிகள்பல பூணுதற்கு

## அமிர்த குணபூஷணிக்கு நகை தரித்தல்.

மாரன் சிலைவளைக்க வாய்ந்தவண்டி னலைமைந்த
நாரி நெகிழ்ந்ததன நல்லசடை கைபுனைந்து
ஆர்ந்த சடையாம் அரவம் உமிழ்ந்ததென
வார்ந்த கதிர்பிறையை மாநுதலிற் சேர்த்தினரால்
ஓதிமீ தூர்ந்துசந்த வொண்டிலக மாமதிக்குப்
போதுபாம் பென்னப் பொரும்வகிரிற் சுட்டியிட்டார்
கண்ணின் உறவைக் கருதி யடுத்திருப்ப
வெண்ணியபோற் பானல் எழிற்செவியின் மீதணிந்தார்
ஓங்குந் தவத்தை உலைப்பதற்கு வேளனுப்பத்
தாங்கியதா மென்னத் தரித்திட்டார் பொன்னோலை
பங்கஞ்செய் பல்லின் பழியினல் முன்னிறப்பத்
தொங்குவதா மென்னத் தொடுமூக் கணியுமிட்டார்
கற்றைக் குழலின் கனத்தா லணங்குமென
உற்ற மணியா லுயர்ந்தகளப் பூணணிந்தார்,
நண்ணியவ ருள்ளம் நடப்ப நகிற்சேற்றை
எண்ணிப் படிபோன் றிசைத்தார் மணிக்கோவை
சிந்துரத்தைக் கண்டுரிய சீயம் வெகுளுமெனப்
பந்தித் ததுபோற் பகருமொட்டி யாணமிட்டார்
கூந்தற் பொறையுங் குவிந்த தனப்பொறையும்
ஏந்துதலால் நோமென் றிசைத்தார்நன் மேகலையை
கன்னியத்தம் வந்துமணிக் கற்கடகத் தேசார
மன்னியது விந்தையென வால்வளைசெங் கையிலிட்டார்
ஆயும் சுவைவை அளிக்குங் கரத்தடுத்து
வாயி னழகறிய வாய்ந்ததெனத் துப்பணிந்தார்
செம்பவள நற்கொடிமேற் சேர்ந்து நவமணிகள்
பம்பியபோற் கைவிரற்குப் பன்மோ திரங்களிட்டார்
உற்றமத மாவரல்கண் டோட மணியிடல்போற்
பற்றகன்றோ ரோடப் பதத்திலணிந் தார்சிலம்பை
கைவணைந்த வேலார் கருத்துமணிக் குன்றேறில்
மெய்வழுக்கி வீழ விரும்பிநறுந் தொய்யிலிட்டார்

புல்லணியை நீக்கிப் பொருந்தழகு மேவலுறும்
சொல்லழகி யென்றாட்குச் சொன்ன நகைதரித்தார்
பொற்பா ரழகினுயர் பூடணமே போன்றிலகும்
அற்பார்ந்த மின்னாட் கலங்கரிப்பங் கானவுடன்

## அமிர்தகுணபூஷணி பாங்கியருடன் சோலைவளங்கண்டு மலர்கொய்தல்.

மாணிக்க மாலை மருவுங் குணமாலை
ஆணிப் பொன்மாலை அணிபூ ரணமாலை
பன்னுமெழிற் பாங்கி பலரோ டலர்பறிக்கப்
பொன்னி னமிர்தகுண பூஷணிபூங் காநுழைந்தாள்
மாலைவளங் கண்டடரும் வண்டினம்போல் மங்கையர்கள்
சோலைவளங் கண்டுநறுந் தூய மலரெடுத்தார்
வஞ்சியர்கள் கைதீண்ட வாய்ந்துயர்ந்த கொம்பரெலாம்
அஞ்சிலம்பார் பொன்னடிதாழ்ந் தாயமல ரீய்ந்ததன்றே
வம்பியலார் தம்பதத்தில் மன்னர்புய முந்தாழக்
கொம்புவந்து தாழ்ந்ததென் று கூறிடுமித் தன்மையென்னே
சேர்ந்தவரிற் றாழ்ந்து சிறந்தபல கொம்பரெல்லாம்
நேர்ந்திலரிற் றாழாது நின்றசில கொம்பரெல்லாம்

## அமிர்தகுணபூஷணி சோலையிற் பாங்கியரை நீங்கி மலர்கொய்தல்.

ஆவிதனிற் பூவா அரவிந்தங் காவிமலர்
தாவில்மதி பூப்பத் தனிவண் டினம்மருள
பொன்னினத்தால் வேய்ந்த புதுமா னிதுவெனவே
தன்னினத்தை விட்டுத் தனித்தே திருமாது
காவி மலரினளி காலாற் றுதைத்தலினாற்
றேவிதிருக் கண்ணின் சிறப்பின் றெனவிகழ்ந்து
சாருங் குமுதமுல்லைத் தண்மலரைப் பூத்திலதால்
நேருந் தனதிதழை நேரா தெனநீக்கி
முல்லை மலரினளி மூசுதலா லேதனது
பல்லையொவ்வா தென்றே பறித்துக்கீ ழேயெறிந்து

வம்பாருங் காவிகுமிழ் வள்ளைமரு வாததினல்
அம்போ ருகமுகனே ராகா தெனவகற்றி

வேட்டு மலரை வெறுத்து விரும்பியநற்
கோட்டு மலரைக் குறித்தாள் குணத்தின்மிக்காள்

தாழையே நின்மலரைத் தாராதென் காளையர்க்குப்
பீழைதரும் வாளெனப்பேர் பெற்றதனு லாயதன்றோ

அன்னையென வந்தோற் களிக்காவு லோபரைப்போல்
புன்னையே பொன்மலரைப் பூத்துமளிக் காததென்னே

உள்ளுருக்க மில்லா வுலுத்தர்போ லேமலரை
முள்முருக்கென் றேபேர் முடிந்ததால் தந்திலையால்

அற்பகமொன் றில்லா அசடர்போ லேமலரைக்
கற்பகமென் றும்பெயரைக் கண்டேன் தராததினல்

மேவிவந்து நின்மலரை வேண்டவிடம் போலநின்றாய்
காவிற் கடுக்கையென்றல் கண்டேன்நின் றேனதனல்

சாரும் மருமலரைத் தந்திலைநீ சண்பகமே
ஆரும் அளியிலையென் றுய்ந்ததனுற் காய்ந்திலனல்

குங்குமமே நின்மலரிற் கொண்டே னுளமுனக்குத்
தங்குமறு பேரதனல் சார்ந்தேன் மனக்கலக்கம்

என்றுமல ரெல்லாம் இழித்து மனஞ்சுழித்து
சென்று மனத்தேய்ந்து சிறந்தநறும் பூவெடுத்தாள்

மாதுளத்தின் போல வணங்கி யளித்ததினல்
மாதுளத்தின் போதை மகிழ்ந்து கரத்தெடுத்துத்

தாய்சிறந்த தென்னத் தனித்தவளை யாதரிக்க
வாய்திறந்து நின்று மருவுதிரு வாம்பலொடு

மல்லிகைசெவ் வந்திபிச்சி வாச மருக்கொழுந்தோ
டல்லியிரு வாக்ஷிதம்பா லாயமல ரெடுத்துப்

போதையெலாம் பற்றப் பொலிவிழந்த கொம்பருக்கு
மாதரசி தூய மணியணைத்து மேபூட்டிச்

சோகமெலாந் தீர்ப்பதற்குத் தோன்று மசோகமதின்
மேகமொடு சார்ந்துவரும் மின்போல் தனித்துநின்றாள்

## பிரபு சோலையில் அமிர்தகுணபூஷணியைக் கண்ணுறல்.

சோலைவளம் பார்த்துத் தொடர்ந்துவரும் போதுகுண
சாலையெனத் தோன்றித் தனித்த திருமாதாம்
காண்டற் கரியஇந்தக் காரிகையி னூழடைந்து
தூண்ட வெளிவருநற் றாய குமரனைப்போல்
அத்தாட்சி சொல்லற் சமையாப் புகழ்நிறைந்த
பெத்தாச்சி யென்றுலகு பேசும் பிரபலவான்
நூலின்மணி மேகலையின் நூபுரத்தின் ஓதியினிற்
சாலும் அளியொலியிற் றையல்நிலை யைக்காட்ட
மன்னவனும் நோக்கி மதிததான் மலர்மருவும்
பொன்னனைய மின்னொளிசெய் பூவை தனைப்பார்த்தான்

### ஐயம்.

பாரணங்கோ மேவுதிருப் பாற்கடலின் வந்தமின்னோ
நீரணங்கோ நேரும் நிலநாக கன்னிகையோ
சந்தமிகு வெற்பதனைச் சார்ந்த மடமாதோ
வந்துநிற்கும் பெண்ணின் வகையொன் றுந் தேர்கிலனே

### துணிவு.

வார்ந்தகருங் கூந்தல் மலர்மாலை வாடியதால்
ஆர்ந்த குறுவேர்வை ஆனனத்திற் றோன்றுவதால்
கண்ணின் இமைகள் கரம்போ லழைப்பதினால்
மண்ணில் அடிகள் வருடுவதா லித்தலத்தின்
மங்கையிவ ளென்ன மதித்தே யிவட்குரிய
அங்கமதைப் பார்த்தங் கதிசயித்துப் பேசலுற்றான்

## பிரபு அமிர்தகுணபூஷணியை வியத்தல்.

ஒருறுப்பைப் பார்த்தால்மற் றோருறுப்பைப் பார்ப்பதற்கு
நேருமன மென்றுசொல்ல நேராதென் றேநினைத்து
வாய்ந்த அனிச்ச மலரி லனுதினமும்
தோய்ந்தோமின் னூர்வருடத் தோன்றியதோ மன்மதன்றன்

பூட்டியதோர் மோலி புடைத்தோ நறியசெம்பஞ்
சூட்டியோ சேந்தங் கொளிரு மிருதாள்கள்
மெய்த்தவத்தி லேதேர்ந்த வேதியர்க ளுள்ளமெல்லாம்
எய்த்தேக வேகிறுக்க வேய்ந்ததரா சோபரடு
தாவும் வராலோ தளராது மன்மதனும்
மேவிச் செயம்பெறற்கு வேய்ந்தபுட்டி லோகணைக்கால்
மூலமென வந்தோர்க்கு முன்னின் றிடர்தொலைத்த
சீலமிகு தூதன் றிகைக்க வருமுழந்தாள்
வாழையோ காளையராம் வாய்ந்தமத வேழமதைப்
பீழையுறக் கட்டும் பெருந்தறியோ வேடனது
மண்டபத்தி லுற்ற மணித்தூணோ கண்டவர்கள்
தொண்டுபட வேவமைந்து தோன்றுந் துடையிரண்டும்
ஓர்ந்த விடைதனத்தா லுண்டென்றே மற்றொருவர்
நேர்ந்தனபோ லென்றே நினைத்தற் கமைந்திருக்கும்
மன்னு தனமாம் மதயானையின் கரமோ
உன்னு மிருவனசத் தூடெழுந்த நாளமதோ
வேளூரிய தேர்நடத்த வேய்ந்த மணிவடமோ
வாளூரிய கண்ணாள் வயிற்றின் மயிரொழுங்கே
கோங்கரும்பென் றூல்நுதியிற் கொண்ட கருப்புமில்லை
ஓங்கு வனசம் ஒளியோன் வரமலரும்
மேல்வாய்ந்த பச்சிளநீர் மேவிப் புளகரும்பா
நால்வாயின் மத்தகமோ நற்பா கரைந்தாங்கும்
செங்கையினால் மேரு சிவன்வளைத்த தாதலினால்
மங்கையிரு கொங்கை வடிவதனை நேரிலையால்
துன்றுபவ ளக்கொம்புந் தோன்றுஞ் சினைக்களிறும்
ஒன்றும் விரலிணைநே ரொவ்வா தெனவிகழ்ந்து
தாமரையோ நீரிலொரு தாளிற் றவம்புரிந்தும்
நேமமொடு கானடைந்து நீண்டதவங் காந்தள்செய்தும்
காரிகையின் றாயவகங் கையைநிக ராததினால்
பாரின்வரா தின்றும் பயமருவி நின்றதுவே
தேமலைவாய்க் குந்தனமேற் சேர்ந்தொளிருந் தோளிணைக்கு
மாமலைவாய்த் தோன்றும் வரையோ நிகராகும்

பூகமோ சங்கோ புகழ்களத்தை யொப்பாகும்
தேகமோ பார்த்தவரின் சித்தத்தைக் கொள்ளைகொள்ளும்
தேவி திருமுகத்தைச் செந்தா மரைநிகரா
மேவு மதியோ விளங்கு களங்குறையும்
மாமதிய மென்று மசிக்கில் மருவுமுண்டே
தாமதிக மாகித் தயங்கி விளங்கிநிற்கும்
துப்பிலவோ கோபமோ தொண்டையோ மாதுளையோ
ஒப்பிலவே யென்னவித ழோங்கி யொளிமருவும்
முத்தும் மயிலின் முருந்தும் மருவுமுல்லைக்
கொத்துமோ மின்னார் குறுமுறுவ லொப்பாகும்
தோன்று திருமால் துணைக்கரங்கள் சோராமல்
ஆன்ற மதியம் அழுங்கி மழுங்காமல்
ஆய சலதி அலையாமல் வானவரும்
மேயவொரு தானவரும் வெம்போர் பொருதாமல்
மந்தரமும் வாசுகியும் வாடி வருந்தாமல்
சந்ததமு மாசை தருமமிர்த மேயூறச்
சித்திரமே யென்றாலும் செப்பிலோ தப்பாது
நத்திவிரைந் தாட நடத்துந் திருமொழியே
நீர்நிலையும் சாணையுமே நேரா விருவலகுக்
காருங்கண் ணாடியென வார்ந்த கபோலமிது
விள்ளுங் குமிழின் விதமே வடிவுறினும்
எள்ளுமொவ்வா தென்ன இசைக்கு மெழிலடைந்து
நாற்றிசையும் போற்றுமதன் நற்றேரின் வீதியெனக்
காற்றிசைந்து லாவக் கனிந்தொளிரு நாசியினுள்
பூசலிடும் வண்டார் புயத்தா ருளமதனை
ஊசலாக் குந்தரத்தா லூசலென வேபொருந்தி
ஆளும் அழகின்மிக்க ஆடவர்க ளார்ந்தவிழி
வாளுருவிப் பாய்ந்த வழியதுபோ லத்தோன்றி
ஆழ்ந்த இருபால் அலையுதிக்கும் ஆதவன்போல்
சூழ்ந்தொளிரும் மாணிக்கத் தோடமைந்த வார்செவியும்
நஞ்சை யமுதை நயந்தளிக்கும் பாற்கடல்போல்
வஞ்சமிகு சூதுகள்ளம் மாயமொடு நேயமுற்று

மூர்த்தி யுருவிதென மூன்றுநிற மேபடைத்துச்
சீர்த்தி பெறுமதன்விற் சேர்ந்த கணையெனவும்
காது வரையடர்ந்து கற்பகம்போ லாங்கவிஞர்
ஓது கவியினையொத் தோங்கும் இருவிழிகள்
நேர்ந்த புயலை நிறைமதியைத் தானடுத்தங்
கார்ந்த சிலையெனவும் ஆழிக் கயனமைத்து
வைத்தகரை யென்னவுங்கண் வாளுரையீ தென்னவுமே
மெய்த்துயர்ந்து மைதோய்ந்து மேவு மிருபுருவம்
சீத மதிமேவச் சேர்ந்தபுய லோவனசப்
போதடுத்த வண்டின் பொலிவோகல் லார்மனதோ
நெய்த்துச் சுருண்டடர்ந்து நீண்டுநெறித் துக்குழன்று
மைய்த்துச் சிறந்தியற்கை வாசனைதோ யுங்கூந்தல்
இத்தகைய தூய வெழிலடைந்த மாதினைப்போல்
எத்தலத்துங் காண்டற் கிசையா தெனநினைந்தும்
சுந்தோப சுந்தரெனும் சூர ரிருவரன்று
அந்தமுற வந்த அயன்படைத்த மாதரசோ
சூரனுக்காய் ஐவிரலித் தூரிலுற்றூற் கானமயல்
கூரவெளி வந்தருளுங் கோதை திருவுருவோ
பொன்னொளிரும் நற்கமலப் பூவையிரு வோரெழிலைப்
பின்னெழிலாய் வைத்தும் பிறங்குந் திருவுருவாள்
தீதகன்ற ரம்பை திலோத்தமையிந் ராணியிவர்
பாதமலர் தீண்டுதற்குப் பாக்கியஞ்செய் தாரிலையே
என்றும் பலவா யியம்பித் தனதுமனம்
கன்றி வருந்திக் கவலை மிகவடைந்து
பேதைதருங் காமமயற் பித்தந் தலைக்கேறி
வாதைதனை மேவி மனதோடு பேசலுற்றான்
மாதரசி தம்பால் மருவுங் குறுநகையால்
ஆதரவுண் டென்றே அறிவிப்ப தல்லாமற்
கண்ணிமைகள் மையற் கடும்பிணிக்கோர் நன்மருந்தாய்த்
தண்ணளிக ளோங்கித் ததும்பித் தருமமுதம்
எத்தலத்தும் பார்த்தடைதற் கெட்டா துயர்ந்தநறும்
புத்தமுதைக் கிட்டிப் பொருந்தி யறிவமெனச்

சேர்ந்தடர்ந்த பூங்காவிற் சேர்ந்த வசோகமதிற்
சார்ந்தமர்ந்த மாதினிடந் தானடைந்து பேசலுற்ருன்

### பிரபு அமிர்தகுண பூஷணியை வேண்டல்.

போர்வேலை வென்றவிழிப் பொன்வேலென் மார்புருவத்
தார்வேய்ந் தோளிருமுடி சாய்த்துநிற்றல் நீதியன்றே
மேவிவரும் தோழியரை விட்டுச் சுனைகுடையா
தோவியம்போல் நின்றீர் உரைப்பீ ரொருமொழியே
பேசின லென்ன பிழைநேரும் மாமதிசேர்
மாசகன்ற செம்பவள வாய்முத் துதிர்ந்திடுமோ
போரானை யாமெனது பொன்னுளத்தைப் போர்முலையாம்
வீரானை யேவி யினிதிருத்தல் நீதியன்றே
வெள்ளி மலைபோல் விளங்கப் பொருள்பெறினும்
எள்ளு மரைப்பணத்துக் கேங்க லியற்கையன்ருே
பார யிருவிழிவேல் பாய்ந்ததழும் பாறமணித்
தாரமருஞ் சிந்துரத்தைச் சாத்துவீர் மார்பினிடை
மாலையே தாங்கெனது மார்பூடு பாய்வதற்கு
வேலையே கைக்கொண்டு விட்டீர் களிறினையே
மின்ருேய் விழிவேலால் வேய்ந்தவிடாய் நீங்குவதற்
கென்ருே நறியதொண்டை யின்னறவ மீவதுவே
எணுலவு பொற்றாண் எழிற்ருேள் மருவுதினம்
வீணுறவே நின்ருல் விரும்புவது மெக்காலம்
ஆய்ந்தகுலி சாயுதற்கன் றஞ்சிவந்த மாமலையை
வாய்ந்தவார்க் குட்படுத்தல் மானே கருணையன்றே
புல்லியதோர் காமப் பொரும்பிணிக்கி நன்மருந்தாய்
அல்லி மலரி லருமுல்லை பூத்ததுவே
பூத்தமல ரென்றுசொலும் புன்முறுவ லென்மயலாம்
நீத்தமதை நீந்துதற்கு நேர்தெப்ப மாயதுவே
தையலரை விட்டுத் தனித்ததுவும் முன்னுளிற்
செய்த தவத்தின் சிறப்பின லாயதன்ருே
ஆனதொரு முத்தம் அளித்தால் அதிகவிலை
போனதொரு கோடிமுத்தம் பொன்னுமக்குத் தாரேனே

செம்பதும மேவும் செழும்பவள மொன்றளித்தால்
நம்பவள மோங்கும் நகைமணியெ லாமுனதே
மானெலா மோட்டி வலைப்படுத்தே னுந்தன்விழி
மான்வலையிற் சிக்கி மதிமருண்டேன் காரிகையே
மாவெலாங் கண்டு மடித்தே னுனதுமத
மாவருதல் கண்டு மயங்கினேன் பைந்தொடியே
கோடுமுயர் பாம்பணியைக் கொண்டுமலை வாயடைந்தும்
மாடினையே யூர்ந்து மலைக்கு மகளானள்
பல்விடந்தோய் பாம்போ படுக்கை அலைவாழ்வு
செல்வர்மனை தோறுந் திரிவா ளிலக்குமியே
அன்னமிலா தின்றும் அயன்றேவி நாமகளென்
றுன்னுகவி வாணர் உறைவிடமெ லாமுழல்வாள்
மூவேந்தர் போற்றும் முடிவேந்தர் மூவுலகில்
மாவேந்தர் மெச்சும் மதிவேந்தன் யானுணர்வாய்
நேர்ந்துயர்ந்த செய்த சிலாமணிதோய் மண்டபத்திற்
சார்ந்த நறுமணந்தோய் சப்ரமஞ்சக் கட்டிலின்மேற்
கன்னியர்கள் பாடக் கவரியடுத் தோரிரட்டத்
தன்னியலைப் பார்த்துத் தராதலத்தி னோர்மயங்க
ஈட்டுவோர்க் கான விருநிதியெ லாமீய்ந்து
பூட்டுவதற் காயமணி பூண்டுலகி லேமதிக்க
மேனகையு மூர்வசியும் வெள்ளடையீ யுஞ்செல்வம்
தான்டையா தின்று தனித்திருப்ப துன்விதியே
சாந்தமிகு தூய தவத்தினோர்க் காயதெல்லாம்
காந்தருவ மென்றே கருதுவா மென்றுரைக்க
நேருமுரை யெல்லாம் நினைத்துப் பதமதனுற்
பாரினையே கீழுமுயர் பாலவகிலை பார்த்துணர்ந்த
தாரினையே வேய்ந்தருள்பெத் தாச்சியெனுங் காண்டீபண்
காரிகையின் றாயமணிக் கைபிடிக்க நாணிநின்றுள்
மாதரசி யுந்தூய மாரா சனுமடுத்த
தாதளையும் நற்பூஞ் சபாமண் டபமதனில்
மாவினங் கீதம்பாட மந்திநின்று கூத்தாடக்
காவினத்திற் றாயகறும் கானங் குயில்பயிற்ற

வார்ந்தநறை தோய்ந்து வடக்கோடு தேருலவ
ஆர்ந்தநறுஞ்சா மரைபோ லாடித் தருக்கள்நிற்ப
ஆவனுடன் மாதும் அரசனுமங் கேவமைத்த
பூவமளி தன்னைப் பொருந்திச் சுகித்திருப்பப்

பிரபுவைத்தேடித்
தளங்கள் வருதல்.

பொன்மானை யன்றுதொடர் பூமானைப் போலுமொரு
தென்மானைப் பின்றொடரும் சீமானை யேதேடி
மான்பின்னே போடிவந்த மாராசன் பொற்சுவட்டைத்
தான்பின்னே நாடிவந்த தானை யொலிகேட்டு
வாசநீ ராடியந்த மங்கையையங் கேநிறுத்தி
மாசகன்ற சேனையின்பால் வந்தே மனக்கனிவாய்

பிரபு தளங்களைக்கண்டு
நகர்நோக்கி விஜயமாதல்.

ஓதக் கடலுக் குவாமதிபோ லுங்கமலச்
சீதக் கடலினுக்கோர் செங்கதிர்போ லுஞ்சேர்ந்தான்
பொன்னவிரு மின்னொளிசெய் பொற்பார் சிவிகையின்மேல்
மன்னவனு மேறவுயர் மந்திரிகள் சூழ்ந்துவர
மந்தாரங் கோங்குபுன்னை மாவுயர்ந்த பூகமிகு
சந்தாபந் தீர்க்குநறுஞ் சாதிப் பலாநிறைந்த
பூவையெலாஞ் சேர்ந்து புகழையெடுத் தோதநறுங்
காவைக் கடந்து கனத்தபரி வாரமுடன்
வானாடு மெச்சவரு வார்க்குவரை யாதளிப்போன்
கானாடு காத்தான் கவினகரி னிற்புகுந்து

ஸ்ரீ கைலாசநாதர் தரிசனம்.

கோதணுகா தார்பெரிய கோவில்வளர் கைலாச
நாதன் சவுந்தரநன் னாயகிபாதந் தொழுது

ஸ்ரீ சிதம்பரமூர்த்தி விநாயகர்
தரிசனம்.

சீர்த்திமிக வோங்கிச் சிறக்குஞ் சிதம்பரமாம்
மூர்த்தி விநாயகனெம் முன்னவன்றா ளைப்பணிந்து

## பிரபு பவனி வருதல்.

நீடும் பலவளங்கள் நேர்ந்தோங்கு மாநகரில்
நாடும் பவனிவர நன்மனத்தி லேநினைந்து
வஞ்சகநெஞ் சோர்தம் மனத்திற்கா லூன்றுகின்ற
பஞ்சகதி மிக்க பரிமீது வந்தேறி
வாய்ந்துவரு நல்வினைபோல் மன்னுநல மேயுதவற்
கேய்ந்தமதி மந்திரிமா ரேந்தல்பின் னேகிவர
ஆனை யொலியும் அதிர்முரசின் பேரொலியும்
சேனை யொலியுமலை செல்லொலியை வாயடைப்ப
எம்பட்ட மென்போ ரிடமெலா மெங்களிறை
தம்பட்டத் துள்ளதெனும் தம்பட்டந் தான்முழங்க
நன்னயஞ் சேரெங்களுயர் நாதனைச்சே ரரரடைதல்
சின்னமே யென்னுஞ் சிறுசின்ன மூதிவர
வாளமருங் கையான் மலரடிபோற் றூர்க்கென்றும்
காளமா வோமெனுமெக் காளங் கலந்தொலிக்கப்
பக்கமெல்லா மெக்கரியும் பார்க்கா துயர்ந்தெழுந்து
திக்கயமேற் சென்றனபோற் சேர்ந்தனசிம் மக்கொடிகள்
சார்மதமாத் தானையினைச் சாகரமென் றேயெழிலி
நீர்பருகத் தாழ்ந்தனபோல் நேரும் துகிற்கொடிகள்
மாமேக மென்ன மதயானை முன்னணியாய்த்
தாமேக வாசிகிரை சாருமதன் பின்னேக
நாற்றமிகு மும்மதத்தின் நற்பரிவி லாழியினோர்
சேற்றினையே தாண்டத் தியங்குங் களிறினங்கள்
சூர்நிலையி தென்னவிலை சொல்வேசி யுள்ளமெனப்
பாரிடையே தோயாது பாய்பரிகள் சென்றனவே

## பவனிவரும் பிரபுவைக் கண்டேவரும் ஆசைகொளல்.

தேடவரும் பேறெனவே சேர்ந்தமகா ராசனைப்பார்த்
தாடவரும் பெண்மைதனக் காசையுற்ற ரத்தருணம்
மானினமே போன்றும் மயிலினம்போ லுங்குழலிற்
றேனினமே யார்ப்பவந்து சேர்ந்தார் பலமாதர்

மண்ணில்நீ ரின்றி மழைவரண்ட காலமுதல்
உண்ணும்நீர் கண்ட உழைக்குலம்போ லுஞ்சேர்ந்தார்
பள்ளத்தே பாய்நீரிற் பார்த்திபன்முன் னேயடுத்த
உள்ளத்தை யேபிடித்தற் கோடி யவருமொத்தார்
ஏந்து குழல்சரிய வேறுங் கலைசொரியப்
பூந்துகிலும் வீழவுயர் புந்தி மருண்டுநின்றார்
கண்ணினாற் காதலெனுங் காணியைநாம் கண்டதின்று
பெண்ணினா லெய்துமுயர் பேற்றின் பலனதென்பார்
நாணும் கலையும் நலனு முயிரொழியப்
பூணு மடனறிவு பொற்புமிழந் தாளொருத்தி
போந்தெ னுளத்திற் புகுந்தான் கதவடைத்தேன்
பூந்தா ரமளியினிப் போவாய்நீ தோழியென்பார்
வானிமிர்ந்த கீர்த்திமிகு வள்ளலழ கைப்பார்க்க
மேனி குளிர்ந்துவந்து வெப்பென் றகம்போவார்
கூந்தற் பொறையாற் குவிந்த தனப்பொறையால்
ஏந்தலையே காணு திடைவெளியி லேபார்ப்பார்
வள்ளல் உயர்முகமாம் வண்கமலத் தண்மலரிற்
கள்ளமிகு காரிகையார் கண்ணளிகள் வீழ்ந்தனவே
சீர்த்தி மிகுமிறைவன் செங்கணாற் சிந்தையினாற்
பார்த்திலனே சற்றும் பரிவிலனென் பாளொருத்தி
கண்ணின் வழியேகிக் கலந்தடர்ந்த காமவெந்நோய்
எண்ணியதோர் பாலுக் கிசைந்தபிறை யாயினதே
காமன் றனது கழையிற் கணைதொடுப்ப
வேமெரிக்கங் கேய்ந்த விறகவியும் போன்றனவே
சேலையொடு மேகலையுஞ் சேர்ந்தமுந்நூ லுஞ்சேர்ந்து
காலைத் தடுப்பக் கவன்றார் சிலமாதர்
இவ்வண்ண மாதரெலா மேங்கி யுளமுருகப்
பவ்வமெனுஞ் சேனையொடு பார்த்திபனுஞ் சென்றேகிக்
கட்டியர்கள் வாழ்த்தக் கவிவாண ரேத்தெடுப்பப்
பொட்டிசைந்த நல்லார்நற் பூரணகும் பந்தாங்கத்
தாலத்தில் மிக்கவெழில் சார்ந்துயர்ந்த மாதரெலாம்
ஆலத்தி தாங்கி அருகே மகிழ்ந்துநிற்ப

வாம்பரியை விட்டு வடிவமதன் கீழிறங்கித்
தாம்பரிவா லுற்றோர்க்குத் தானம் பலபுரிந்து

பேழைதனி லுள்ள பெருநிதிகைக் கொண்டுவரும்
ஏழைதமக் கீய்ந்தடுத்த இட்டருட னேமகிழ்ந்து

மாமனையி தென்ன வளருமுயர் மாளிகையாம்
கோமனையி னுட்புகுந்து கோமானுஞ் சீர்த்தியுடன்

எம்மா நிலமும் இறைஞ்சற் குளமுவந்து
சிம்மா தனத்திற் சிறப்புற் றினிதிருப்ப

### தலைவி தலைவனைக்காணு தயர்தல்.

இன்னவித மன்புற் றினிதா சனத்திருந்த
மன்னன் வரவை வனத்திலுண ராதயர்ந்து

மாலையே யுற்று மயங்கி மதிமருண்டு
சோலைதனி லேதனித்த தோகை நிலையுரைப்பாம்

நேத்திரம்போ லென்னையுற்ற நேசன்வரு வானெனவே
காத்திருந்த மங்கைசென்ற காவலனைக் காணுமல்

சித்தம்நொந்து வாடித் திகைத்துடல மேபசந்து
பித்தமுற்ருர் போலப் பிதற்றி மயலாகி

ஏங்கிப் பெருமூச் செறிந்து மதிமருண்டு
தாங்குவா ரின்றித் தனியே புலம்பலுற்றுள்

வந்தெனது கையை வலியவே தொட்டணைந்த
சந்தமிகு மெந்தனுயர் சாமி வராததென்னே

எந்தனையே மாற்றி இரும்பொழிலி லேமறைந்தோன்
கந்தனோ இந்திரனோ கந்தர்ப்ப னோஅறியேன்

மாலோடு மென்னை மருவினேன் ஒங்குதிரு
மாலோவென் னென்று மதிப்பே னறிகிலனே

கந்தனென்ருல் முங்காலு கையிலையே காவுறையும்
மைந்தனென்ருல் ஆயிரங்கண் வாய்ந்திருப்பக் காணேனே

அச்சுதனென் ருல்முகிலி னூர்ந்த நிறமிலையே
மெச்சுமத னோஅவர்க்கு மேவும் உருவிலையே

போந்தென் னுளத்திற் புகுந்து வருத்துகின்ற
காந்தன்வரத் தாழ்த்ததென்ன காரணமோ தேர்கிலனே

என்னெனமோ மேவற் கிதஞ்சொல்லி வந்தணைந்த
மன்னன்மன மென்னைவிட்டு மாறினதோ வோர்கிலனே

உன்னுமெங்க ளாருயிரை யொன்ருய்ப் படைத்த தெய்வம்
பின்னு முடலைப் பிரித்ததிதற் குத்தானே

தன்னைப்போ லில்லாத் தரத்தினர் சென்றவிடத்
தென்னைப்போல் மாற்ரு ளெதிர்ப்பட்டா ளோவறியேன்

ஓசற் குருத உறுதிசொல்லி யென்மனது
பேதமுரு திங்குவைத்துப் பேர்வனத்திற் சென்றமகன்

வாராத தென்னவிது வஞ்சகமோ சற்றுமனத்
தோராத தென்ன உயர்வோ உணர்கிலனே

நான்செய் தவறெதுவோ நாடியன்று செய்தவமோ
தேன்சொல்லோ னுள்ளத் திடமோ வறிகிலனே

கூறென்றே னாரையொன்ரு கோதையயே மேவுதொன்னூற்
ருறென்றே சொன்ன னதையறிந்து தேர்கிலனே

என்று பலபலவா யெண்ணியெண்ணித் தன்னுளத்தி
லொன்றுந்தோற் ருமல்வனத் துள்நுழைந்து பார்க்கலுற்ருள்

காட்டிற் களிற்றிணையாய் கைப்பிடிபோ லுங்கழுத்திற்
பூட்டியதை விட்டுப் பொருந்தவரு மன்றிலைப்போற்

கானெலாந் தேடிவரு கானலைநீ ரென்ருேடு
மானெனவே சென்று மயங்கி நிலைகுலைந்து

பார்த்தவிட மெல்லாமப் பார்த்திபனென் றேமிருந்த
ஆர்த்தியுட னேடி அடையா துளமருண்டு

செங்கைமுத்தம் நீங்கத் தெரிவைமுத்த மேவெளுப்பக்
கொங்கைமுத்தம் நீறவிழிக் கோகனக முத்துகுத்தாள்

ஆய மடமா தரசனைக்கா ணுதடுத்த
நேயத்தாற் ருனே நினைத்துப் புலம்பலுற்ருள்

காவியே வண்டினமே கட்பகையை யெண்ணுதெம்
ஆவிதனைக் கண்டா லறைவீர் மறையாமல்

கொன்றையே தண்டலையே கூந்தற் பகையோரா
தின்றைக் குயிர்போலும் ஏந்தல்வரக் கண்டதுண்டோ

வீங்குந் தனத்தின் வெறுப்பி னிகழாமல்
கோங்கு மரமேயென் கொற்றவனிங் குற்றதுண்டோ
கஞ்சமே யென்முகத்தாற் காலு மிகல்வினையா
தஞ்சலென வந்தேற் கறிவிப்பீர் நாதனையே
தேகத்தால் நேர்ந்த சினமின்றிச் சண்பகமே
சோகத்தால் வந்தேன் துணைவனைக்கண் டாலுரைப்பாய்
மாதிரிநே ரில்லாவோர் மன்னன் வரவுணர்ந்தாற்
பாதிரியே யென்னிலையைப் பார்த்தெமக்குச் சேர்த்துவைப்பாய்
கிஞ்சுகத்தே மேவிக் கிளைக்குமிளம் பைஞ்சிறைகொள்
அஞ்சுகங்கா ளெந்தனுயி ரன்பன் வரவுரைப்பீர்
மாவிற் குயிலே மருவு மிளமயிலே
சேவித்தே னுங்களையென் சேந்த னிடஞ்சேர்ப்பீர்
என்றுடுக்கை சோர வெழிலா ருடலயரத்
துன்றுகருங் கூந்தலொடு சொன்ன வளைகழறத்
தன்னை மறந்து தரையிற் கிடந்தயர்ந்து
மன்னனையே யெண்ணி மதிமருண்டு மூர்ச்சையுற்றாள்

பாங்கியர் தலைவியைக்
காணல்.

பூவையெலாம் பற்றலுற்ற பூவையரெ லாமழகார்
பாவைதனைத் தம்மினத்திற் பார்க்கா தவசமுற்று
மானெலாங் கூடி வருவதுபோ லத்திரண்டு
கானெலாந் தேடியெங்குங் காணா துளமருண்டு
பஞ்சியா லோங்குதனப் பாரத்தா லன்னநடை
வஞ்சியிரு தாளின் மருவுஞ் சுவடறிந்து
மேவுங் குறியை விடாதுதொடர்ந் தேகவங்கே
கூவுங் குயிலுங் குரலடைத்து நின்றேங்க
மென்முலையி லேகுறியும் மேவிதழி லேவடுவும்
வின்னுதலி லேதிலக வேர்வரும்பச் சிந்தியதும்
வார்குழலுஞ் சோர வளையல் கரம்நெகிழத்
தார்குலைய மேனி தளர வுடையுலையத்
தங்கநிற மெல்லாம் தரையிற் புழுதிபட
மங்கைமார் கண்டு மயங்கி மனமுலைந்து

தெய்வக் குறையோநேர் திட்டிபட்ட தோவனத்தில்
மெய்வருத்தத் துண்டான வெப்போ வறிகிலமென்
றன்னமே தேனேமுன் னான கடலமுதே
சொன்னமே யெம்முயிரே தூண்டா மணிவிளக்கே
வாய்திறந்து பார்த்தெமக்கோர் வார்த்தைசொல்ல லாகாதா
தாயறிவா ளாகிலுயிர் தப்பாது மாய்ப்பளென்றே
வாரி யெடுத்து மடியின்மார் போடணைத்து
நாரி முகத்தை நறுநீரி னாற்றுடைத்து
மாங்கனியே யெங்களுக்கு வாய்த்த செழும்பாகே
தீங்கரும்பே யுந்தனுக்குத் தீங்கரும்பக் காரணமென்
என்றுரைத்த பாங்கியருக் கேந்திழையு மாவலுடன்
ஒன்று முரையாடா தூமரைப்போ லுற்றிடவும்
கண்டார்க ளாடவரின் காற்சுவட்டைப் பக்கமதில்
உண்டான பித்திதுவென் றுண்மை தனையறிந்து
தேவனோ தீங்கனியைச் சேர்ந்தகன்று போனமகன்
ஏவனோ வென்ன இசைத்துப் பலவாறாய்
மானபரன் பெத்தாச்சி மன்னனுயர் மான்வேட்டை
கானகத்திற் செய்துவரக் கண்டோ மவரேயிக்
காரிகையைச் சேர்ந்து கலந்ததிதற் கையமில்லை
பாரில் நமக்குப் பயமும் பழியுமில்லை
புண்ணியவான் பெத்தாச்சிப் பூபதியைச் சேர்ந்ததிவள்
உண்மையெனில் மங்கையரு ளோங்குமதிஷ் டக்காரி

பாங்கியர் தலைவியை
மாளிகைக்கழைத்துவரல்.

என்னுஞ் சகிமார்க ளேழையைக் கைத்தாங் குதலாய்ப்
பொன்மா ளிகைக்கழைத்துப் போய்ப்புகுந்தங் கார்த்தியுடன்
ஆலத்தி யேந்தி அயினிநீர் திட்டிசுற்றிப்
பாலத்தி னீறணிந்து பாலமுத மீய்ந்துமலர்ச்
செங்கையினாற் றூங்கிமிகச் சேர்ந்தவிரு தாள்வருடி
நங்கைதனை வைத்தார் நறியமலர்ச் சேக்கையின்மேல்
நாளருத் துய்ய நறியமலர்ச் சேக்கையுற்று
வாளரா நுங்கும் மதியைநிக ராயினளே

வாக்குப் புரண்டு வனவேடன் செங்கரத்தாற்
றாக்குஞ் சரத்துடனே சாய்ந்த மயிலுமொத்தாள்
ஆய்ந்த மலரமளி அக்கினியி லேறியதாற்
காய்ந்து பொரிந்து கலவையெலாஞ் சிந்தினவே
ஏய்ந்த கனலா லிழைபுகுந்த நூலனைத்தும்
தீய்ந்து கரிந்தனவே செய்ய தளிர்களெல்லாம்

### தலைவி விரகத்தாற் புலம்பல்.

தேடரிய மின்னுளைச் சேர்காமத் தீதனையும்
சாடுமென்றே வெய்யோனுஞ் சார்ந்தான் கரமொடுக்கி
மங்கையா மிம்மயிலை வான்கோம்பி கண்டுசினந்
தங்கஞ் சிவந்ததுபோ லந்திவந்து போயினவே
ஆலந் தொடர்ந்ததுவோ ஆழிகிளர் வோஅலது
காலநிறம் மையிற் கலந்ததெனுங் காரிருள்போய்
நீரில் விழவொருவன் நேர்நின்று மற்றொருவன்
பாரிலெழு வான்போற் பான்மதியந் தோன்றியதே
திங்களெனும் தச்சன் திசையனைத்தும் வெண்ணிலவாம்
பொங்கு சுதையாற் புதுக்குவான் போன்றுளதால்
ஓங்கு மதியி னொளிசுடரா லொண்டொடியாள்
தாங்கா தவசமுற்றுத் தானே புலம்பலுற்றாள்
சங்க முலவுந் தனிக்கடலின் நங்கையுடன்
துங்கமுடன் றோன்றிற் சுடுதியோ வென்னையுமே
தோன்று மிடமலறத் தோன்றுவாய் நங்கைதனக்
கேன்ற மனையை யெழுந்தழிப்பாய் வான்மேவி
ஓங்கு மிருளா ருலகை விழுங்கிமென்மேல்
வீங்கு கறுநெருப்பின் மீதெழுந்த வெண்ணெருப்பே
தக்கன் மகத்திலொரு தாளா லுதையடைந்தாய்
மிக்க கொடுமையன்றோ வெந்தழலை வெண்மையெனல்
நஞ்சமதை அங்கமதில் நண்ணினோன் நீரடுத்துச்
செஞ்சடையிற் சேர்த்ததுநின் றீமை கருதியன்றோ
பாராட் டமுதகுணப் பண்பினோ னென்பதுனைக்
காராட்டை யென்றுங் கவின்வெள்ளா டென்பதொக்கும்

நாடோறுந் தேய்வாய் நலமிலா நின்றரத்தால்
ஈடோவொன் றில்லாத வென்னையென்ன செய்யாயோ
இங்கொருவ ரில்லா திருக்குஞ் சமயமதில்
அங்கசனுற் றீவினையே அன்றிலாய் வந்தாயே
சொல்லாத நோன்பின் குறுமுனியைச் சார்ந்துமெனைக்
கொல்லாநின் றூயுனது கொள்கையிதோ மாருதமே
ஆக்குந்தாய் நின்சொல் லறியாமுன் னேதுறந்த
காக்குந்தா யுன்றனுரை கண்டுவெறுத் தேகழித்த
பூக்கு மரத்திற் பொருந்தி வனக்குயிலே
நீக்கமறக் கூவில் நினைவெறுத் தற்கென் தடையே
கல்லும் உருகவரும் காளைகவின் றோர்ந்தவர்முன்
செல்லுதற்கு நாணம் செனித்தே தனித்திருக்கும்
ஏழையென வந்திங் கெனைவெறுத்து முன்றன்மனக்
கோழைதனை நன்றாய்க் குறித்தே னுருவிலியென்
றிங்கடுத்த துன்பனைத்து மெண்ணிப் பலவாறாய்
அங்கசனம் பாலேமா தங்கசனம் பால்வெறுத்தாள்
ஆயசத்தைக் கொண்டயரு மன்பார் திருவினுக்குப்
பாயசத்தை நேர்ந்துநறும் பாயசத்தை யேகழித்தாள்
மண்டுங் கனிரசமும் வாய்ந்த செழும்பாகுங்
கண்டுங் கனியும்வரக் கண்டுங் கனிவிழந்தாள்
பாங்கியரு மின்றிமதன் பாணத்தாலே தளர்வுற்
றேங்கிப் புலம்பி இருக்குந் தருணமதில்

அன்னை பாங்கியரை
வினவல்.

முன்மகமே செய்து முதிர்ந்ததவத் தாலுதித்த
தன்மகவின் பாலுயர்ந்த தாயு மினிதடைந்து
வேர்த்துத் தளர்ந்து மெலிந்த திருமகளைப்
பார்த்துப் பதைபதைத்துப் பாங்கியரைத்தான் சினந்து
தோய்ந்த மதுரமொழித் தோகையர்க்குக் கானகத்தில்
வாய்ந்த தறியேன் மறைக்கா துரையுமென்றாள்
இவ்வசனங் கேட்ட இகுளையரு மேநடுங்கி
அவ்வனத்தில் நேர்ந்ததனை அன்னையர்க்குச் செப்பலுற்றார்

வஞ்சனையு மல்லவுயர் மாற்றார்கள் சூதுமல்ல
செஞ்சொன்மொழி மாதினுக்குத் தெய்வக் குறையுமல்ல
பூவகா வனத்தில்வனப் போதெடுக்கும் போதிலென்றும்
நீங்காதா ளெம்மைவிட்டு நீங்கி மலரெடுத்தாள்
சோடிழந்த அன்றிலைப்போற் றேகையைக்கா ணாதுமனம்
வாடி மயங்கி வருந்தியொரு பாங்கதனில்
ஆரணியந் தன்னி லசோக மரத்தடியில்
வாரணிந்த கொங்கை வடுவேற மெய்சோரத்
தங்கநிற மங்கத் தரையிற் றுயிலமர்ந்த
மங்கையைப்பார்த் தோமடுத்தோர் மன்னன் சுவடறிந்தோம்
தேட்டுத் தழைக்குமுயர் சீமான்பெத் தாச்சிமன்னன்
வேட்டைக்கு வந்த விதமன்றி வேறறியோம்
என்றவுரை கேட்டவுட னீன்றதா யையமுற்று
நன்றிதுவோ செய்துவந்தீர் ஞாயம்வெளி யானதிங்கே
கானகத்திற் சென்றுசெய்த காரியங்கள் நன்றாச்சே
ஆனதினல் நேரும் அவமதிப்பை யோர்ந்திலிர்நீர்
பாங்கியரே பொற்பூப் பறிக்கவனஞ் சென்றேகி
மாங்கிலியஞ் சூட்டி மயற்படுத்தி வந்தீரோ
தேன்மொழியா ளுள்ளத் திடத்தையறிந் தால்முனமே
தேன் பொழிற்குப் பூவெடுக்கச் செல்லவிடுவேனே

அன்னை மகளை வினவி
அகமகிழல்.

கச்சணிந்த மின்னரசே காரிகையே யுன்றன்மன
திச்சையுறச் செய்தங் கிசைத்த தெவருரைப்பாய்
நித்தமுமே யப்பொழிற்கு நேரிழையே போகேலென்
றெத்தனையோ சொன்னேன் இதமொன்றுங் கேட்டிலையே
பொன்னனையா ளவ்வனத்திற் போதெடுக்கப் போயுறினும்
தன்னந் தனியாய்த் தனித்திருக்கக் காரணமென்
பூவெடுக்கப் போயிருந்தாற் போனதுபோ லேவருவாள்
காவடுத்துக் காவலன்பாற் கைகலக்கப் போனவள்காண்
வார்ந்த குழலிசொற்கு மாதரசி யஞ்சுவளோ
ஆர்ந்த புவியா ரனைவருக்கும் நாமம்வைப்பாள்

மண்வசியஞ் செய்யுமிந்த மாவணிக மன்னவற்குப்
பெண்வசியஞ் செய்தல் பெரிதன் றெனநினைந்து

மன்னியதோர் கண்ணி வலையின்றி யேகிடைத்தாற்
கன்னிக் குயிலைக் கலக்காமற் போவாரோ

புல்வாயென் ளுேதிற் புகும்பெரிய மன்னவற்குப்
புல்வாயென் ளுேதிலன்றே புல்லாமற் போவாரோ

ஆறடுத்தோர்க் கான அரும்பசியி லார்ந்தசுவைச்
சோறடுத்தா லுண்டு சுகிக்காமற் போவாரோ

பாரிற் பணப்புதையல் பாட்டைதனிற் சென்றவர்க்கு
நேரில் எடுக்க நினையா தகல்வாரோ

அஞ்சுகத்தைக் காட்டும் அரிய மொழியுடைய
கிஞ்சுகத்தைக் கையிற் கிடைத்தால் விடுவாரோ

கான்வேட்டைக் காகவந்த காவலனுக் கானகன்னி
மான்வேட்டை கிட்டில் மருவா தகல்வாரோ

தொய்யிற் குயத்தழகும் தோகை முகவழகும்
மெய்யழகுங் காணிலந்த வீரன்விட்டுப் போவாரோ

வட்டவுல கம்புரக்கும் மன்னவன் பெத்தாச்சியுயர்
கட்டழகைப் பார்க்கிலிந்தக் கன்னிவிட்டு மீள்வாளோ

பார்த்திபனைப் பார்த்தவிந்தப் பாவையுயி ரோடுவந்த
தார்த்தியுற நாம்செய் அருந்தவத்தின் பேறெனவே

குற்ற மொருவர்செய்யிற் கொற்றவன்பாற் போயுரைப்பார்
கொற்றவனே செய்யில் குறையுரைக்க நீதியுண்டோ
பெற்றோர்க ளின்றிப் பிரபும் நினைந்ததென்ன
பொற்றொடியு மவ்வாறு போவதற்கு ஞாயமென்ன

வாதமரும் பேதமையே மாதர்க் கணிகலமென்
றோது மொழிப்படியே வொண்டொடியாள் செய்துவந்தாள்

மாதரெலாம் பாங்கிருக்க வாய்ந்தபெத்தாச் சிக்குரிசில்
மாதவத்தால் யானீன்ற மாதரசைச் சேர்ந்ததற்கு

கஞ்சமலர் வேதன் கணித்ததனை யெண்ணுது
வஞ்சியரை நோவ வகையெமக்குத் தானுமுண்டோ

நாயகன்மே லிச்சைகொண்டால் நன்கின்றோர் வேண்டாவோ
ஆய நமதுபுக ழத்தனையு மோர்ந்திலிரோ

ஆங்கால மெய்வருந்த வேண்டா மருங்கொம்பிற்
றேங்காய்க் கிளநீர்போற் சேருமென்ற மெய்யுரையின்

இவ்வுலகில் வாழ்புருட ரெல்லவர்க்கும் நற்கிளைக்கு
மொவ்வுந் திருமணமே யொண்டொடியாள் செய்துவந்தாள்

மங்கையருக் கேற்ற மகராச னேஅவனும்
அங்கசனுக் கேற்ற அருமைரதி யேயிவளும்

முற்பிறப்பிற் செய்த முழுத்தவத்தி னற்பலனே
பொற்புமிகு கான்மருவிப் பொற்றருவைக் கொண்டுவந்தாள்

பாவுறுநற் சர்க்கரைமென் பந்தலினிற் றேன்மாரி
மேவியதே யன்றி விளைந்ததினி யொன்றுமில்லை

இவ்வா றுரைசெய் திலகுமுய ரன்னையுந்தன்
நவ்விவிழி யாட்கு நகைவகையெ லாமணிந்து

மின்னைப் பழித்தஇடை வித்தகியே பெத்தாச்சி
மன்னனையே சேர்ந்து மகராசி யாகவுற்றே

விள்ளும் புவியனைத்தும் வெண்குடைக்கீ ழாண்டினிது
பிள்ளை பதினாறும் பெற்றுநீ வாழ்ந்திடென்றாள்

இத்தகைய வார்த்தைதனை யீன்றதாய் செப்புதல்முன்
மொய்த்த குழலினர்கள் முத்துச் சிவிகையுடன்

செப்புங் கவரியொடும் சேர்ந்தபல கீதமொடும்
மைப்படியுங் கண்ணிமனை வாயில்வரக் கண்டுவந்தாள்

பொற்சிவிகை கண்டுடலம் பூரித்துத் தன்மகளை
அற்புடனங் கேற்றி அரசன்பா லேயனுப்பப்

பெற்றதாய் சொற்படியே பெண்கொடிநல் லாண்டிபட்டிக்
கொற்றவனைச் சேர்ந்து குணமாக வாழ்ந்திருந்து

கற்பார்ந்து புத்திரரைக் காதலுடன் பெற்றெடுத்துப்
பொற்பா ரமிர்தகுண பூஷணியும் வாழ்வுடைந்தாள்

## வாழி.

மாமறையும் வாழி மருவும் மகம்வாழி
பூமலியும் வானம் புவியு மிகவாழி
சந்ததமும் நல்லறமும் சார்தவமு மேவாழி
பைந்தமிழிற் றேர்ந்துயர்ந்த பாவாணரும் வாழி
செப்பும் செழும்புவியிற் றேவேந் திரகுலமும்
ஒப்பரிய விந்நூலும் ஓங்கி மிகவாழி
தீர னுதாரன் திருமா திலங்குபுயன்
சீரமர்ந்த பூவிற் சிறக்கு மதிகாரன்
திக்கனைத்துஞ் சீர்த்திமிகு சீமான்பெத் தாச்சிவள்ளல்
தக்கபுக ழோங்கித் தழைத்தென்றும் வாழியவே

சுபம்.

முற்றிற்று.

**Printed by M. S. S. MANI,** *Proprietor,* **Sri Kala Press, Sivaganga.**